
# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 253 ஆவணி 03 — Regd. No.CBE/090/2011-2013

கோவை, செவ்வாய், ஆகஸ்ட் 19, 2025 — ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி — பக்கம் 8 — ₹ 3.00

**பேச்சுவார்த்தை ரத்து: இந்திய பயணத்தை தவிர்த்த அமெரிக்க குழு - அமலுக்கு வரும் 50% வரி?**

....2-ம் பக்கம்

**பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் இணையத்தில் வெளியீடு**

...3-ம் பக்கம்

**ஆசிய கோப்பை கிரிக்கெட்: இந்திய அணியை இன்று அறிவிக்கிறது தேர்வுக்குழு**

....6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று உடல்நலம் குறித்து விசாரித்தார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உடனிருந்தார்.

## அமைச்சர் துரைமுருகனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 19-

**வீட்டில் ஓய்வெடுத்து வரும் அமைச்சர் துரைமுருகனை முதல்வர் ஸ்டாலின் நேரில் சென்று சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்.**

சென்னையில் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திடீரென மயங்கி விழுந்தார். இதில் அவருக்கு கையில் காயம் ஏற்பட்ட நிலையில் மயங்கி விழுந்த அமைச்சர் துரைமுருகனை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு அவரை டாக்டர் பரிசோதனை செய்ததில் அமைச்சர் துரைமுருகனுக்கு தோல்பட்டை எலும்பில் லேசான சிராய்ப்பு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து லேசான காயம் காரணமாக துரைமுருகனுக்கு கையில் கட்டு போடப்பட்டுள்ளது. மேலும் மூன்று நாட்கள் தொடர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்த நிலையில், வீட்டில் ஓய்வெடுத்து வரும் அமைச்சர் துரைமுருகனை முதல்வர் ஸ்டாலின் நேரில் சென்று சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார். மேலும் மருத்துவர்கள் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். முதல்வர் அமைச்சர் எ.வ.வேலு உடனிருந்தார். தற்போது அமைச்சர் துரைமுருகன் நலமுடன் இருப்பதாக கூறப்படுகிறது.

### வாக்காளர் பட்டியல் விவகாரம்:

# தலைமை தேர்தல் ஆணையத்துக்கு முதல்வர் ஸ்டாலின் 7 கேள்விகள்

*** ஆதாரை ஆவணமாக ஏற்க தடுப்பது எது?**

*** எப்படி இத்தனை பேர் நீக்கப்பட்டனர்?**

சென்னை, ஆக. 19-

**இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார்.**

**ராகுல் குற்றச்சாட்டு...**

கடந்த மக்களவைத் தேர்தல் மற்றும் பல்வேறு மாநில பேரவைத் தேர்தல்களில் பாஜகவுடன் கைகோத்து, தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக சில சான்றுகளை வெளியிட்டு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டை முன்வைத்துள்ளார். மேலும், நடப்பாண்டு இறுதியில் பேரவைத் தேர்தல் நடைபெறும் பிகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் பாஜகவுக்கு சாதகமாக லட்சக்கணக்கானோரின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன.

**7 நாள்களுக்கு...**

இதுதொடர்பாக நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், அரசமைப்புச் சட்டம் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவுகள் பலவற்றை சுட்டிக்காட்டி, ராகுலின் குற்றச்சாட்டை மறுத்தார். மேலும், குற்றச்சாட்டுகள் குறித்து 7 நாள்களுக்கு ராகுல் காந்தி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் அல்லது தேசத்திடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஞானேஷ் குமார் தெரிவித்திருந்தார்.

**முதல்வர் 7 கேள்வி....**

இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் செய்தியாளர்கள் சந்திப்பை விமர்சித்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், 7 கேள்விகளை எழுப்பியுள்ளார். முதல்வர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது: இன்டியா கூட்டணியினர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிப்பதற்குப் பதிலாக, கூடுதலான கேள்விகளை எழுப்பியிருக்கிறது தலைமைத் தேர்தல் ஆணையரது ஊடகச் சந்திப்பு.

**பின்வரும் கேள்விகள் எழுகின்றன:**

1. வீடுதோறும் கணக்கெடுப்பு நடத்தியும், எப்படி இத்தனை தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்?

2. புதிய வாக்காளர்களின் பதிவு வழக்கத்திற்கு மாறாகக் குறைவாக உள்ளது. இந்த இளம் வாக்காளர்கள் கணக்கெடுக்கப்பட்டனரா? தகுதிக்குரிய நாளில் 18 வயது நிறைவுற்ற எத்தனை இளம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர் என்பதைச் சொல்லும் தரவுகள் ஏதேனும் இருக்கிறதா?

3. விசாரணை மற்றும் இரண்டு முறையீடு நடைமுறைக்கான காலவரையறை, எதிர்வரும் பீகார் மாநிலத் தேர்தலில் பெருமளவிலான வாக்காளர்களை விலக்கும் வாய்ப்புள்ளது. இவ்விவகாரத்தைத் தேர்தல் ஆணையம் எவ்வாறு தீர்க்கப் போகிறது?

4. பிற மாநிலங்களில் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்படும்போது, இந்த நடைமுறைச் சிக்கல்களைத் தேர்தல் ஆணையம் கணக்கில்கொள்ளுமா?

5. 01/05/2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மறைந்த வாக்காளர்களின் பெயரை நீக்குமாறு 17/07/2025 அன்று தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் முறையிட்டோம். இது எப்போது நிறைவேற்றப்படும்?

6. வாக்காளரின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணமாக ஆதாரை ஏற்கத் தேர்தல் ஆணையத்தைத் தடுப்பது எது?

7. "நியாயமான தேர்தல்கள்" என்பதே தேர்தல் ஆணையத்தின் இலக்காக இருக்குமானால், அது மேலும் வெளிப்படைத்தன்மையுடனும் - வாக்காளர்களுக்கு நெருக்கமாகவும் இருக்கலாமே?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

### மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிப்பு:

## காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

பெங்களூரு, ஆக. 19-

**கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், மேட்டூர் அணையின் உபரி நீர் போக்கி வழியாக திறக்கப்படும் தண்ணீர் அளவு அதிகரிக்கும் என்பதால், காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

கபினி மற்றும் கிருஷ்ண ராஜ சாகர் அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 70,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், நேற்று மாலை 4 மணிக்கு மேட்டூர் அணை உபரி நீர் போக்கி வழியாக தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து நேற்று மாலை திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 22,000கன அடியிலிருந்து வினாடிக்கு 35 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்படவுள்ளது.

நீர் மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 21,300கன அடி நீரும் மீதமுள்ள நீர் உபரி நீர் போக்கி வழியாக திறக்கப்படும் என்று நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கர்நாடக மாநிலத்தின் காவிரியின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் கேரள மாநிலம் வயநாட்டிலும் கன மழை பெய்து வருகிறது.

கன மழை காரணமாக அங்குள்ள கபினி, கிருஷ்ண ராஜசாகர் அணைகளில் இருந்து வினாடிக்கு 80 ஆயிரம் கன அடி வரை காவிரியில் உபரி நீர் திறக்கப்பட உள்ளது. இதனால் மேட்டூர் அணை நிரம்பி உபரிநீர் போக்கியான 16 கண் பாலம் வழியாக வினாடிக்கு 50,000 கன அடி முதல் 70 ஆயிரம் கன அடி வரை உபரி நீர் திறக்க வாய்ப்பு உள்ளது. உபரி நீர் திறப்பு காரணமாக காவிரி கரையோர பகுதி மக்களுக்கு மேட்டூர் நீர்வளத் துறை சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சேலம், ஈரோடு, நாமக்கல், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட 11 காவிரி டெல்டா மாவட்ட ஆட்சியர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படியும் அவர்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எச்சரிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் உபரி நீர் போக்கி கால்வாய் பகுதிகளில் உள்ள தகமாபுரி பட்டினம், அண்ணா நகர், பெரியார் நகர், காந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் மேட்டூர் வட்டாட்சியர் ரமேஷ், மேட்டூர் தீயணைப்பு படை அலுவலர் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் ஒலிப்பெருக்கி மூலம் பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். உபரி நீர் போக்கி கால்வாய் பகுதியில் விலங்குகள், மனிதர்கள் யாரேனும் உள்ளனரா என்று பார்வையிட்டு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். காவிரி வெள்ளத்தில் குளிக்கவும் துணி துவைக்கவும் கால்நடைகளை குளிப்பாட்டவும் செல்லக்கூடாது என்றும் வெள்ளத்தின் அருகில் சென்று புகைப்படம் எடுப்பதையும் செல்ஃபி எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## தலைமை தேர்தல் ஆணையரை நீக்கக்கோரி எதிர்க்கட்சி அமளி

### பார்லி., மாநிலங்களவை ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 19-

**தலைமை தேர்தல் ஆணையரை நீக்கக்கோரி எதிர்க்கட்சியினர் அமளி ஈடுபட்டதால் மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது.**

பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. தற்போது, பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரும் நடைபெற்று வருவதால், அங்கேயும் தங்களது எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றன.

இந்த நிலையில், கடந்த வாரம் செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பீகாரில் வாக்குகள் திருட்டு என்று கூறி தேர்தல் ஆணையம் மீதும், மத்திய பா.ஜ.க. அரசு மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வைத்தார். இந்த நிலையில், ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கும் வகையில், தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் டெல்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது, "வாக்குகள் திருட்டு என்று சொல்வது அடிப்படை இல்லாதது, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கண்டு அஞ்சமாட்டோம். இத்தகைய குற்றச்சாட்டு சொல்பவர்கள் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று கோரியிருந்தார். இந்த நிலையில், நேற்று காலை 11 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. ஆனால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர். அப்போது, தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனால், பாராளுமன்ற வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

அதே நேரத்தில், மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால், மதியம் 2 மணி வரை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அதே போல் வாக்காளர் திருத்த பட்டியல் விவகாரத்தை முன்வைத்து மக்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், மக்களவை மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### அலாஸ்கா பேச்சுவார்த்தை குறித்து

## பிரதமர் மோடியுடன் ரஷ்ய அதிபர் புதின் பேச்சுவார்த்தை

டெல்லி, ஆக. 19-

**அலாஸ்காவில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து பிரதமர் மோடியுடன் ரஷ்யா அதிபர் தொலைபேசியில் விளக்கமளித்தார்.**

உக்ரைன், ரஷ்யா இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடந்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், ரஷ்ய அதிபர் புதினும் கடந்த 5ம் தேதி பேச்சுவார்த்தை நடத்தினர். அமெரிக்காவின் அலாஸ்காவில் நடந்த இந்த பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இதில் ஐரோப்பிய நாடுகளின் முக்கிய தலைவர்களும் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில், பிரதமர் மோடியுடன் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். தொலைபேசி மூலம் நடந்த இந்த பேச்சுவார்த்தையில், உக்ரைன்-ரஷ்யா போர் தொடர்பாக அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை சந்தித்தது குறித்து பிரதமர் மோடியிடம் ரஷ்ய அதிபர் புதின் பேசினார். அதேவேளை, உக்ரைன் விவகாரத்தில் அமைதியான தீர்வு எட்ட வேண்டும் என புதினிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு அலாஸ்காவில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உடனான சந்திப்பு குறித்து பேசிய எனது நண்பரான ரஷ்ய அதிபர் புதினுக்கு நன்றி. உக்ரைன் போருக்கு அமைதியான முறையில் தீர்வுகாண இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதற்கான அனைத்து முயற்சிகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும். நமது தொடர்ச்சியான பேச்சுவார்த்தை, பரிமாற்றம் வரும் நாட்களில் இருக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மோடியுடன் மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் சந்திப்பு

டெல்லி, ஆக. 19-

**பிரதமர் மோடியுடன் மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்தார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், மகாராஷ்டிரா மாநில ஆளுநருமான சி.பி. ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதி தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தேசிய ஜனநாயக கட்சி தலைவர்கள் ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

இந்த நிலையில் சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று மதியம் பிரதமர் மோடி சந்தித்தார். துணை ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் 9-ம் தேதி நடைபெற இருக்கிறது. வருகிற 21-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும்.



## மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE |
|---|---|
| 676.09 | 245.65 |
| பாயின்ட் 81,273.75 | பாயின்ட் 24,876.95 |

**தங்கம்** 1 சவரன் ₹74,200 · 1 கிராம் ₹9,275

**வெள்ளி** 1 கிலோ ₹127,000 · 1 கிராம் ₹127.00

**டாலர்** ₹87.37

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

### பேச்சுவார்த்தை ரத்து....

# இந்திய பயணத்தை தவிர்த்த அமெரிக்க குழு - அமலுக்கு வரும் 50 சதவீத வரி?

**நியூயார்க், ஆக. 19-**



பேசசுவார்த்தை ரத்தானதை தொடர்ந்து இந்திய பயணத்தை அமெரிக்க குழு ரத்து செய்து 50 சதவீத வரியை அமலுக்கு வரும் என்று தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மீது பரஸ்பர வரிகளை கடந்த ஏப்ரல் மாதம் விதித்தார்.

அதன்பின் வரி விதிப்பை நிறுத்தி வைத்து இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை அமெரிக்கா நடத்தியது. இதில் இந்தியா-அமெரிக்கா பிரதிநிதிகள் குழுக்கள் இடையே 5 சுற்று பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை. இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக வருகிற 25-ந்தேதி முதல் 29-ந்தேதி வரை 6-வது சுற்று பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக அமெரிக்கா பிரதிநிதிகள் குழு டெல்லிக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையே பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்ததால் இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பதாக டிரம்ப் சில நாட்களுக்கு முன்பு அறிவித்தார். மேலும் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணை வாங்குவதால் இந்தியாவுக்கு அபராதமாக மேலும் 25 சதவீதம் வரியை விதித்தார். இந்த அபராத வரி வருகிற 27-ந் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் வரி பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை இந்தியாவுடன் பேச்சுவார்த்தை கிடையாது என்று டிரம்ப் தெரிவித்தார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் வருகிற 25-ந்தேதி தொடங்குவதாக இருந்த இந்தியா-அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க பிரதிநிதிகள் குழுவின் இந்திய வருகை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த 6-வது சுற்று பேச்சுவார்த்தை வேறு தேதியில் நடத்த திட்டமிடப்படலாம் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை ரத்து செய்வதற்கான அதிகாரபூர்வ காரணம் வெளியிடப்படவில்லை.

புதிய வரி விதிப்பு அமலுக்கு வருவதற்கு 2 நாட்களுக்கு முன்பு இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற இருந்த நிலையில் ரத்து செய்யப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, ஆக. 19-**

சென்ற வாரம் தொடக்கம் முதலே தங்கம் விலை படிப்படியாக குறைந்து வந்தது. கடந்த ஆக. 11-இல் சவரனுக்கு ரூ.560 குறைந்து ரூ.75,000-க்கும், ஆக. 12-இல் சவரனுக்கு ரூ.640 குறைந்து ரூ.74,360-க்கும், ஆக. 13-இல் சவரனுக்கு ரூ. 40 குறைந்து ரூ.74,320-க்கும், ஆக. 14-இல் விலை மாற்றமின்றி சவரன் ரூ.74,320-க்கும், ஆக. 15-இல் சவரனுக்கு ரூ.80 குறைந்து ரூ.74,240-க்கும் விற்பனையானது.

அதைத் தொடர்ந்து வாரத்தின் இறுதி நாளான சனிக்கிழமை தங்கம் விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ரூ.9,275-க்கும், சவரனுக்கு ரூ.40 குறைந்து ரூ.74,200-க்கும் விற்பனையானது. இதன் மூலம் சென்ற வாரத்தில் மட்டும் தங்கம் விலையானது, சவரனுக்கு ரூ.1,360 வரை குறைந்து விற்பனையானது. இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலையில் நேற்று மாற்றமின்றி கிராம் ரூ.9,275-க்கும், சவரன் ரூ.74,200-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையிலும் மாற்றமின்றி கிராம் ரூ.127- க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1.27 லட்சத்துக்கும் விற்பனையானது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி.விஸ்வநாதன் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது பேத்தியின் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

## எர்ணாகுளம் - வேளாங்கண்ணி இடையே சிறப்பு ரயில் இயக்கம்

**சென்னை, ஆக. 19-**

எர்ணாகுளம் - வேளாங்கண்ணிக்கு இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- வேளாங்கண்ணி திருவிழாவின் போது பயணிகளின் கூட்ட நெரிசலை குறைக்க பின்வரும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். எர்ணாகுளம் சந்திப்பு - வேளாங்கண்ணி வாராந்திர விரைவு ரயில் (வண்டி எண். 06061) ஆகஸ்ட் 27, செப்டம்பர் 03 மற்றும் 10, 2025 ஆகிய தேதிகளில் (புதன்கிழமைகளில்) இரவு 11.50 மணிக்கு எர்ணாகுளத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் பிற்பகல் 3.15 மணிக்கு வேளாங்கண்ணியை சென்றடையும்.

மறுமார்க்கத்தில் வேளாங்கண்ணி - எர்ணாகுளம் வாராந்திர விரைவு ரயில் (வண்டி எண்: 06062) ஆகஸ்ட் 28, செப்டம்பர் 4 மற்றும் 11, 2025 ஆகிய தேதிகளில் (வியாழக்கிழமைகளில்) மாலை 6.40 மணிக்கு வேளாங்கண்ணியில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 11.55 மணிக்கு எர்ணாகுளத்திற்கு சென்றடையும். பெட்டிகள் அமைப்பு: 1- ஏசி இரண்டு அடுக்கு பெட்டி, 3- ஏசி மூன்று அடுக்கு பெட்டிகள், 8- ஸ்லீப்பர் வகுப்பு பெட்டிகள், 4- பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள், 1- இரண்டாம் வகுப்பு பெட்டி மற்றும் 1- பிரேக் வேனுடன் கூடிய லக்கேஜ். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்களின் முன்னேற்றத்திற்கு

# முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது: அரசு பெருமிதம்

**சென்னை, ஆக. 19-**

தமிழ்நாடு, பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்வதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் செய்தி, மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;-

உலக மனித சமுதாயத்தில் மகளிர் ஏறத்தாழ சரிபாதியாக உள்ளனர், அவர்களின் சிந்தனைகளும் உழைப்பும் உலக முன்னேற்றத்திற்குப் பயன்படக்கூடியவை ஆனால் மகளிர் சமுதாயம் சுதந்திர மற்ற ஒரு கூட்டுப் பறவை போல் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தது. உலகில் நிலவும் ஆட்சி முறைகளில் முதன்மையானது குடியாட்சி முறை. குடி ஆட்சிமுறையில் ஒவ்வொருவரும் வாக்களித்து தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஒவ்வொருவருக்கும் வழங்குகிறது.

இந்த வாக்களிக்கும் உரிமையைக் கூட மகளிருக்கு வழங்கப்படாத சூழ்நிலையில் 1921 ஆம் ஆண்டில் நீதிக் கட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் தான் முதல்முதலில் மகளிருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அதன் பின்னர்தான் மேலை நாடுகளில் எல்லாம் வாக்களிக்கும் உரிமை மகளிருக்கு வழங்கப்பட்டது என்பது வரலாறு. அதேபோல தமிழ்நாட்டில் 1971 இல் அமைந்த நீதிக் கட்சி அரசும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசும் பெண்கள் முன்னேற்றத்திற்குக் கல்வி உரிமை அரசுப் பணிகளில் 30 சதவீத இட ஒதுக்கீடு உரிமைஇ உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இட ஒதுக்கீடு, பின்னர் அதுவே 50 விழுக்காடாக நடைமுறைபடுத்தப்பட்டமை, முதலிய மகத்தான சாதனைகள் இந்தியாவிலேயே நிகழ்த்தப்பட்டன.

திராவிட மாடல் அரசின் புரட்சிகரமான திட்டங்கள்

2021 திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு மகளிர் சமுதாயம் மேலும் முன்னேற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமை பெண் திட்டம், மகளிரைத் தொழில்முனைவோராக்கும் திட்டம் முதலிய புரட்சிகரமான திட்டங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு மகளிர் சமூக விடுதலை பொருளாதார விடுதலை முதலிய அனைத்து வகையிலும் ஆண்களுக்குச் சமமாக உரிமைகள் பெற்றுப் படிப்படியாக முன்னேறி வருகின்றனர். இவையெல்லாம்இ இந்திய மாநிலங்கள் எதிலும் நடைமுறைப்படுத்தப்படாத புதிய திட்டங்கள். இத்திட்டங்களைப் பிற மாநிலங்கள் தற்போது தான் பின்பற்றத் தொடங்குகின்றன.

நிர்வாகத் துறையில் மட்டும் அல்ல தொழில்துறையிலும்

தமிழ்நாட்டுப் பெண்கள் நிர்வாகத் துறையில் மட்டும் அல்லாமல் தொழில்துறையிலும் மகத்தான சாதனைகள் புரிந்து வருகின்றனர். தொழில்துறையில் மகளிர் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து அனைத்துத் தரப்பினரும்பாராட்டுகின்றனர்.

தமிழ்நாடு பெண்கள் முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும், அவர்களுக்கான வேலைவாய்ப்பிலும் மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரி மாநிலமாக விளங்குகிறது. ஒரு சமூகத்தின் உண்மையான வளர்ச்சி என்பது அங்கிருக்கும் பெண்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் உணர்கிறார்கள், வாழ்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. இந்த வகையில், தமிழ்நாடு பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும் அரசின் கொள்கைகளும் திட்டங்களும் அரசின் கொள்கைகளும் திட்டங்களும் சமூக ஆதரவும் இணைந்து, பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலையும், பொருளாதார சுதந்திரத்தையும் உறுதி செய்கின்றன. முறைப்படுத்தப்பட்ட உற்பத்தித் துறையில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்கும் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. இந்தத் துறை, பெண்களுக்கு நிலையான வருமானத்தையும், வேலை பாதுகாப்பையும் வழங்குகிறது. மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்ததாக, முறைசாராத துறைகளில் பெண்கள் பணியாற்றுவதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. இது மொத்தத்தில் இந்தியாவின் 9.3% பங்களிப்பை வழங்குகிறது என்று சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது.

இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் பணியாளர்களில் 41.4% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது, பெண்கள் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதிலும், பொருளாதார ரீதியாகச் சுதந்திரமாக முன்னேற்றம் காண்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதை வெளிப்படுத்துகிறது, இது, பெண்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள் என்பதற்கான முக்கிய ஆதாரம். தொழில்துறையில் பெண்களின் இந்த அதிகப்படியான பங்கேற்பு, வேலைவாய்ப்பில் பெண்களுக்குப் பாரபட்சம் இல்லை என்பதையும், அவர்கள் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது, இது ஒரு பாதுகாப்பான, பாலின சமத்துவம் நிறைந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம், அவர்களின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பிற்கும் மிகவும் முக்கியமானது. ஒரு பெண் பொருளாதார ரீதியாகச் சுதந்திரமாக இருக்கும்போது, அவர் குடும்பம் மற்றும் சமூகத்தில் அதிக மரியாதையைப் பெறுகிறார். தமிழ்நாட்டில், அரசுப் பணியிடங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பெண்களுக்குக் கணிசமான இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. இது, அவர்கள் பணியிடங்களில் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்கிறது. அதேபோல், பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பிற்காகப் பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் போக்சோ சட்டம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் சட்டம், பெண்களுக்குப் பாதுகாப்பான பணியிடச் சூழலை உறுதி செய்வதோடு, புகார் அளிப்பதற்கான வழிமுறைகளையும் எளிதாக்குகிறது.

தமிழ்நாட்டில் கல்வியறிவு விகிதம் அதிகமாக இருப்பதால், சமூகத்தில் பெண்கள் குறித்த விழிப்புணர்வும் உயர்ந்துள்ளது. திராவிட மாடல் அரசு வழங்கும் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை போன்ற பல்வேறு திட்டங்கள், பெண்களின் கல்வி மற்றும் தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கின்றன.

பெண்களின் பொருளாதாரத் தடையைத் தகர்த்து, கல்விக்கான - வேலைவாய்ப்புக்கான - முன்னேற்றத்துக்கான பயணத்தைச் சாத்தியமாக்கிய ஒரு திட்டம் விடியல் பயணம். விடியல் பயணத்திட்டத்திற்கு அரசு செய்யும் செலவு மகளிர் முன்னேற்றத்துக்கான முதலீடாக மட்டுமே பார்க்கப்படுகிறது. புதுமைப் பெண் திட்டம் பல்லாயிரக்கணக்கான கல்லூரி மாணவிகளின் இடை நிற்றலைக் குறைத்து, அவர்களின் உயர்க் கல்விக் கனவைச் சாத்தியாக்கியிருக்கிறது. நான் முதல்வன் திட்டம் மூலம் பல இலட்சக் கணக்கான மாணவிகள் தங்களது திறனை வளர்த்துக் கொண்டு பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகள் பெற்றுள்ளனர். நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் காவல்துறையில் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களான காவலன் செயலி, இரவு நேரக் கண்காணிப்புப் பேட்ரோல் போன்ற திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

பெண்கள் சமுதாயம் மேலும் முன்னேற எதிர்காலத்தில், பெண்கள் சமுதாயம் மேலும் முன்னேற, சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சி போன்ற ஆய்வு நிறுவனங்களின் பரிந்துரைகள் மிகவும் அவசியமானவை. குறிப்பாக, பெண்களுக்குத் தனி கழிப்பறை வசதிகள், எளிதாக அதிக எடையைத் தூக்க உதவும் உபகரணங்கள், பயண சிரமங்களைச் சரிசெய்தல் போன்றவை, மேலும் அதிக அளவில் பெண்களை முறை சார்ந்த துறைகளுக்குக் கொண்டு வர உதவும்.

தமிழ்நாட்டில் பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் உள்ளனர் என்பது வெறும் ஒரு கருத்து அல்ல. இது, தரவுகளாலும், நடைமுறை முன்னேற்றங்களாலும் நிரூபிக்கப்பட்ட உண்மை. உற்பத்தித் துறையில் பெண்களின் பங்களிப்பு, பொருளாதாரச் சுதந்திரம், மற்றும் அரசு வழங்கும் பாதுகாப்பு அம்சங்கள், முதலியவை தமிழ்நாடு பெண்களுக்கான சிறந்த இடமாக இருப்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேட்டோவை மறந்து விடுங்கள்:

# ஜெலன்ஸ்கிக்கு ட்ரம்ப் ‘செக்’

**வாஷிங்டன், ஆக. 19-**

கிரிமியா, நேட்டோவை மறந்து விடுங்கள் என்று ஜெலன்ஸ்கிக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து கிரிமியாவை திரும்பப் பெறுவது, நேட்டோவில் உறுப்பு நாடாவது போன்ற எண்ணங்களை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கைவிட்டுவிட்டால், போர் நிறுத்தம் உடனடியாக சாத்தியப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெவித்துள்ளார்.

கிரிமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அங்கீகரிக்கலாம் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறி வருகிறார். ட்ரம்ப்பின் இந்த முடிவுக்கு உக்ரைன் நிச்சயமாக உடன்படாது என்றே கணிக்கப்படுகிறது. மேலும், ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாடு, ரஷ்ய ஆதரவுப் போக்கு என்றும் விமர்சிக்கப்படுகிறது. பல காலமாக சர்ச்சைக்குரிய பகுதியாக கிரிமியா இருக்கும் நிலையில், ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாடு போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்காது, மாறாக ஒரு புதிய சிக்கலுக்கே வழி வகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

நேட்டோவை எதிர்க்கும் ரஷ்யா - நேட்டோ என்பது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உள்பட 12 நாடுகள் சேர்ந்து 1949-இல் இந்த ராணுவ கூட்டு அமைப்பை உருவாக்கின. இதில் உறுப்பினராக உள்ள எந்தவொரு நாடு மீது ஆயுத தாக்குதல் நடந்தால், அந்த நாட்டைக் காக்க மற்ற உறுப்பு நாடுகள் ஓரணியாக சேர்ந்து இயங்க வேண்டும்.

அந்த வகையில், உக்ரைனை நேட்டோவில் உறுப்பு நாடாக இணைத்தால், ரஷ்யாவிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது உக்ரைனின் கணக்கு. 1990-களில் இருந்தே உக்ரைன் நேட்டோ அமைப்புடன் இணக்கம் காட்டி வந்தாலும் கூட 2014-ல் உக்ரைனில் அமைந்த ஆட்சி, முழுக்க முழுக்க மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவான ஆட்சி. அந்த ஆட்சி உக்ரைனை நேட்டோவுடன் இணைப்பதில் அதி தீவிரம் காட்டியது. இதுதான் ரஷ்யா - உக்ரைன் போருக்கான மிக முக்கிய புள்ளி என்றாலும் அது தகும்.

ஏனெனில் உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் அங்கே அமெரிக்காவின் கை ஓங்கும், அது நமக்கு பேராபத்து என்று கருதியது ரஷ்யா. இதனாலேயே ரஷ்யா, இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ட்ரம்ப் வைத்த செக்-கும்; ஜெலன்ஸ்கி எதிர்வினையும் - இந்தச் சூழலில், ஜெலன்ஸ்கியை சந்திக்கும் சில மணி நேரங்களுக்கு முன்னர் புயலைக் கிளப்பும் பதிவொன்றை பதிவிட்டுள்ளார் டொனால்டு ட்ரம்ப். இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதளப் பதிவில், “உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி விரும்பினால் ரஷ்யாவுடனான போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர முடியும். இல்லை போரை தொடர்ந்து நடத்த அவர் விரும்பினால், அவர் போராடலாம்.

இந்தப் போர் எப்படி தொடங்கியது என்பதை நினைத்துப் பாருங்கள். நேட்டோ அமைப்பில் உக்ரைனை இணைக்கக் கூடாது. சில விஷயங்கள் ஒருபோதும் மாறாது.

அதேபோல் 12 ஆண்டுகளுக்கு முன்னர் கிரிமியாவை ஓர் அமைதி ஒப்பந்தம் மூலம் ரஷ்யாவுக்கு வழங்கினார் ஒபாமா. அதை மாற்ற முடியும் என்று உக்ரைன் நினைக்கக் கூடாது” என்று தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு உடனடியாக எதிர்வினையாற்றிய உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, “கிரிமியாவை ரஷ்யாவுக்கு தாரை வார்த்தது போன்ற மாஸ்கோவுக்கான சலுகைகள் புதினை வலுப்படுத்தியுள்ளது. கிரிமியா இழப்பின் விளைவாக, அதன் பின்னர் இன்னும் சில கிழக்குப் பிராந்தியங்கள், அப்புறம் டான்பாஸை இழந்தோம்.

இவை புதுப்புதுத் தாக்குதல்களை எங்களை நோக்கி ஏவ புதினுக்கு புதிய உத்வேகம் தருகிறது. உக்ரைனுக்கு வாய் வார்த்தைகளாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் பலிக்கவில்லை. நாங்கள் போரை நிறுத்த விரும்புகிறோம். கூடவே, அது நீடித்த அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம் என்றார்.


## அசாமில் நிலநடுக்கம்

**நாகோன், ஆக. 19-**

அசாமின் நாகோன் பகுதியில் நேற்று மதியம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மதியம் 12.09 மணியளவில் ரிக்டர் அளவில் 4.3 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

35 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 26.28 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 92.71 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. இந்த மாதத்தில் மட்டும் அசாமில் இது 7-வது நிலநடுக்கமாகவும், நாகோனில் மூன்றாவது நிலநடுக்கமாகவும் பதிவாகியுள்ளது. இந்தப் பகுதியில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

**19-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள். புதுப்புது ஆராய்ச்சிகள், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**ரிஷபம்:-** துன்பங்களே வாழ்க்கையானால், துன்பங்களே இன்பமாக தெரியும். மாணவ, மாணவிகள் மிகவும் கருத்துடன் படிக்க வேண்டிய காலம். மனைவி, மக்களின் மருத்துவச் செலவுகள் கூடும்.

**மிதுனம்:-** மனத் திருப்தி அதிகரிக்கும் வண்ணம் தன வரவு அதிகரிக்கும். வீடு, மனை வாங்கும் எண்ணம் மனதில் எழும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும். இல்லத்தில், இன்பம் இரு கரையும் புரண்டோடும்.

**கடகம்:-** மனைவி, மக்களால் வீண் செலவுகள் ஏற்படும். மிகவும் அவசியமான பொருட்களை மட்டும் வாங்கி வீட்டுச் செலவுகளை குறையுங்கள். புதிய மாற்றங்களால் தேவையற்ற அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**சிம்மம்:-** உங்கள் திறமைகளை வெளிக்காட்டி, முடியாத காரியங்களையும் முடித்து வைப்பார்கள். குடும்பத்தில் புதிய வரவாக குழந்தை பாக்கியம் ஏற்படும். திருமண விஷயங்கள் திருப்திகரமாக நடக்கும்.

**கன்னி:-** தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவும், சக பெண் பணியாளர்கள் உதவியும் கிடைக்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**துலாம்:-** உடன்பிறப்புக்களின் ஒற்றுமை ஓங்கும். கோவில், குளம் பணிகளில் ஈடுபாடு கொள்வார்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாதே. தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்கினால். வெற்றி உறுதி.

**தனுசு:-** இல்லத்தில் இன்பம் அதிகரிக்கும். வரவேண்டிய வரவினங்கள் வந்து வாழ்க்கை வளம் பெருகும். ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டில் பெண்களின் மதிப்பு பெருமளவில் உயரும்.

**மகரம்:-** தனவரவு அதிகரிக்கும். எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**கும்பம்:-** அவமானம், கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்த போதினிலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**மீனம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. மனோபயம் மற்றும் தூக்கக் குறைவு ஆகியவை ஏற்படும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவசியம். வயிற்று உபாதைகள் எழலாம்.

# த.வெ.க. மீது சீமான் விமர்சனம்

**சென்னை, ஆக. 19-**

தமிழக வெற்றிக்கழகம் மீது சீமான் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அடுத்த ஆண்டு (2026) நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில், கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற்று நாம் தமிழர் கட்சி உறுப்பினர்களும் சட்டசபைக்குள் நுழைவார்கள் என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தல் கணக்குப்போட்டு வைத்திருந்தார். ஆனால், நடிகர் விஜய்யின் புதிய வரவான தமிழக வெற்றிக் கழகமும் சட்டசபை தேர்தலை முதன்முறையாக சந்திப்பதால், அது நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கியையும் பாதிக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கணித்துள்ளனர்.

இது நாம் தமிழர் கட்சியின் வெற்றிப் பயணத்துக்கு முட்டுக் கட்டையாக அமையும் என்று கூறப்படுகிறது.

இது நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானை அதிருப்தி அடையச் செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதன் வெளிப்பாடே, இப்போதைய அவரது பேச்சில் தமிழக வெற்றிக் கழகத்தை சீண்டுவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய சீமான், தமிழக வெற்றிக் கழகத்தை வம்புக்கு இழுப்பது போல் சில கருத்துகளை கூறினார். அவர் பேசும் போது, “த.வெ.க. கொள்கை என்னவென்று கேட்டால், தளபதி.. தளபதி.. என்று அக் கட்சி தொண்டர்கள் சொல்கிறார்கள். அது எனக்கு தலைவலி என்று கேட்டது.

அதேபோல், நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்று கேட்டால் டி.வி.கே. என்று சொல்கிறார்கள். எனக்கு டீ விற்க வந்ததாக கேட்கிறது” என்று கூறிய சீமான், த.வெ.க. தொண்டர்களை அணிலுடன் ஒப்பிட்டும் பேசினார்.

இது தமிழக வெற்றிக் கழக தொண்டர்களை எரிச்சல் அடைய செய்துள்ளது. என்றாலும், சீமான் திடீரென தமிழக வெற்றிக் கழகத்தை விமர்சிப்பதற்கு காரணம், நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சத்தால்தான் என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

# தமிழகத்தில் விடியல் பயணத்தில் ரூ.50 ஆயிரம் சேமித்த பெண்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஆக. 19-**

தமிழகத்தில் பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், விடியல் பயணத்தின் மூலம் மகளிர் ரூ.50 ஆயிரம் வரை சேமித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-



வீட்டை விட்டு வெளிய போயிட்டு வரணும்னாலே 50 ரூபாய் தேவை. நான் வீட்டுலயே இருந்துக்குறேன்" என்ற எண்ணத்தை - பொருளாதாரத் தடையைத் தகர்த்து, கல்விக்கான - வேலைவாய்ப்புக்கான - முன்னேற்றத்துக்கான பயணத்தைச் சாத்தியமாக்கியது விடியல்பயணம், நமது திராவிட மாடலின் 51 மாதங்களுக்குள் விடியல் பயணத்தின் மூலம் நமது சகோதரிகள் 50 ஆயிரம் ரூபாய் வரை சேமித்துள்ளதும் - அந்தத் திட்டத்துக்கு அரசு செலவழிப்பதும், மகளிர் முன்னேற்றத்துக்கான முதலீடு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடர் அமளி எதிரொலி:

# எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு சபாநாயகர் கடும் எச்சரிக்கை

**டெல்லி, ஆக. 19-**

பாராளுமன்ற மக்களவையில் தொடர் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி.களுக்கு சபாநாயகர் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21-ந்தேதி தொடங்கியது. இதில் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் ஆகியவை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தினமும் அமளியில் ஈடுபட்டு வந்தனர்.

இதனையடுத்து பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டது. ஆனால் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க மத்திய அரசு தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகிறது. சுதந்திர தின விடுமுறையை அடுத்து இன்று பாராளுமன்றம் கூடிய நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கியது.

இதனால் மக்களவை மதிய 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. இதனிடையே அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்களை எச்சரித்த சபாய்நகர் ஓம் பிர்லா, "நீங்கள் கோஷமிடும் அதே சக்தியுடன் கேள்விகளைக் கேட்டால், நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும். மக்கள் உங்களை அரசாங்க சொத்துக்களை அழிக்க இங்கு அனுப்பவில்லை, மேலும் அரசாங்க சொத்துக்களை அழிக்க எந்த உறுப்பினருக்கும் உரிமை இல்லை என்று நான் உங்களை எச்சரிக்கிறேன்.

நீங்கள் அரசாங்க சொத்துக்களை அழிக்க முயற்சித்தால், நான் சில முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். நாட்டு மக்கள் உங்களைப் பார்த்து வருகிறார்கள். இதுபோன்ற சம்பவங்களுக்கு உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நான் உங்களை மீண்டும் எச்சரிக்கிறேன். அரசாங்க சொத்துக்களை அழிக்க முயற்சிக்காதீர்கள். இது உங்களுக்கு எனது வேண்டுகோள்" என்று தெரிவித்தார்.

## திரையுலகில் 50 ஆண்டு நிறைவு:

# நடிகர் ரஜினிகாந்துடன் பா.ஜ.க. தலைவர் சந்திப்பு

**சென்னை, ஆக. 19-**

திரையுலகில் 50 ஆண்டுகள் நிறை ஆனதையொட்டி நடிகர் ரஜினிகாந்துடன் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.



நடிகர் ரஜினிகாந்தை தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்துப் பேசியுள்ளார். நடிகர் ரஜினிகாந்த் திரைத்துறைக்கு வந்து 50 ஆண்டுகள் ஆனதையொட்டி பலரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் நடிகர் ரஜினிகாந்தை தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் பத்ம விபூசண்! தாதா சாகிப் பால்கே விருது பெற்ற கலைஞன், ஆறிலிருந்து ஐம்பது வரையில் அனைவருக்குமான சூப்பர் ஸ்டார் அண்ணன் ரஜினிகாந்தை இன்று அவர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினேன். அவர் வாழ்த்துக்களைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தேன். அரை நூற்றாண்டு காலம் இந்திய திரையுலகை ஆண்ட கலைஞன், நெற்றியில் திருநீறும் நெஞ்சத்தில் தேசப்பற்றும் என்றும் அழியாமல் காட்சி தரும் தேசிய நடிகர். அண்ணன் ரஜினிகாந்த் இன்னும் பல நூற்றாண்டு காலம் திரை உலகை ஆண்டு தாயகப் பணி ஆற்ற வேண்டும் என இறைவனை பிரார்த்தனை செய்து, அவரை வாழ்த்தி வணங்குகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

## 3-வது நாளாக தொடர் கனமழை:

# மும்பைக்கு 'ரெட் அலர்ட்'

**மகாராஷ்டிரா, ஆக. 19-**

மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பை அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து 3வது நாளாக கனமழை பெய்து வருவதால் பல்வேறு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

மும்பை கடந்த இரண்டு நாள்களாக கனமழை தொடர்ந்து வருகிறது. இதனால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கக மாறியுள்ளது. கனமழையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகளில் சாலைகள் வெள்ளத்தில் மூழ்கின. அந்தேரி சுரங்கப் பாதை மற்றும் லோகண்ட் வாலா வளாகம் போன்ற சில தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பெருநகரத்தின் உயிர்நாடியாகக் கருதப்படும் உள்ளூர் ரயில்கள் 15 முதல் 20 நிமிடங்கள் தாமதமாக இயக்கப்பட்டதாக அதிகாரிகள், பயணிகள் தெரிவித்தனர்.

மும்பை மற்றும் தானே, ராய்காட் மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்றும், நாளையும் சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என்றும், தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் மிக கனமழை பெய்யும் என்றும் கணித்துள்ளது. இன்று ரத்னகிரி மாவட்டத்திற்கு சிவப்பு எச்சரிக்கையையும், நாளை சிந்து துர்க்கிற்கு ஆரஞ்சு எச்சரிக்கையையும் விடுத்துள்ளது. கனமழைக்கு இதுவரை இருவர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

கிழக்கு மற்றும் மேற்கு புறநகர்ப் பகுதிகளில் காலை 9 மணி முதல் ஒரு மணி நேரத்தில் முறையே 37 மிமீ, 39 மிமீ மற்றும் 29 மிமீ சராசரி மழை பதிவாகியுள்ளது. கிழக்கு புறநகர்ப் பகுதியில் உள்ள செம்பூரில் அதிகபட்சமாக 65 மிமீ மழையும், சிவாஜி நகரில் 50 மிமீ மழையும் ஒரு மணி நேரத்தில் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 24 மணி நேரத்தில், தீவு நகரத்தில் சராசரியாக 54.58 மிமீ மழையும், கிழக்கு புறநகர் பகுதிகளில் 72.61 மிமீ மழையும், மேற்கு புறநகர்ப் பகுதிகளில் 65.86 மிமீ மழையும் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பல பகுதிகளில் 100 மிமீக்கும் அதிகமான மழைப் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# த.வெ.க. கொடிக்கு எதிரான வழக்கு ஐகோர்ட்டில் தள்ளுபடி

**சென்னை, ஆக. 19-**

தமிழக வெற்றிக்கழகத்தின் கொடிக்கு எதிரான வழக்கு ஐகோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் 'சிவப்பு, மஞ்சள், சிவப்பு' நிறத்திலான கொடி தங்கள் சபையின் கொடியை போல் இருப்பதாகவும், எனவே அதனை பயன்படுத்த அக்கட்சியினருக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் கோரி சென்னை ஐகோர்ட்டில் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை தலைவர் பச்சையப்பன் என்பவர் மனுத்தாக்கல் செய்தார்.

அந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, 80 லட்சம் உறுப்பினர் கொண்ட த.வெ.க., தங்களுடைய சிறிய அமைப்பான தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை விழுங்க அனுமதிக்க முடியாது என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. தங்கள் சபையின் கொடியையும், த.வெ.க. கொடியையும் ஒப்பிடும்போது குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், த.வெ.க. கொடியால் தங்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என மனுதாரர் விளக்காததால் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என த.வெ.க. தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை கொடியை த.வெ.க. பயன்படுத்தியுள்ளது என கூற முடியாது என்று தெரிவித்தார்.

மேலும், 2 கோடிகளையும் ஒப்பிடும்போது த.வெ.க. கொடியால் குழப்பம் ஏற்படும் என சொல்ல முடியாது என்று குறிப்பிட்ட நீதிபதி, தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை தலைவர் பச்சையப்பன் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## எதிர்க்கட்சியினரை 'வானரங்கள்' என்று விமர்சனம்:

# சுரேஷ் கோபி எம்.பி.க்கு கேரள அமைச்சர் கண்டனம்

**திருவனந்தபுரம், ஆக. 19-**

எதிர்க்கட்சியினரை வானரங்கள் என்று சுரேஷ் கோபி எம்.பி. விமர்சித்ததையடுத்து கேரள அமைச்சர் கடும் கண்டம் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இது தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பீகாரில் வாக்கு திருட்டு நடைபெறுவதாக கூறி, தேர்தல் ஆணையம் மீதும், மத்திய பா.ஜ.க. அரசு மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்

இதனிடையே, காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள் எழுப்பிய வாக்காளர் பட்டியல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், இந்திய தேர்தல் ஆணையம் அவர்களுக்கு பதில் அளிக்கும் என்றும் மத்திய அமைச்சர்யும், திருச்சூர் தொகுதி எம்.பி.யுமான சுரேஷ் கோபி தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசும்போது, வாக்காளர் பட்டியல் மோசடி குற்றச்சாட்டுகளை எழுப்பிய நபர்களை "வானரங்கள்" (குரங்குகள்) என்றும் கோபி குறிப்பிட்டார். மேலும், குற்றச்சாட்டுகளை எழுப்பிய 'வானரங்கள்' பதில்களைப் பெற நீதிமன்றத்திற்கு செல்லலாம்" என்று அவர் கூறினார். இந்த நிலையில், சுரேஷ் கோபியின் பேச்சுக்கு கேரள மாநில கல்வித்துறை



அமைச்சர் சிவன்குட்டி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பேஸ்புக்கில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "சுரேஷ் கோபியின் பேச்சு அவமானகரமானது, துரதிர்ஷ்டவசமானது மற்றும் ஜனநாயக விரோதமானது. சுரேஷ் கோபி தனது கருத்துக்களை திரும்பப் பெற்று பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் கண்ணியமான வார்த்தைகளை பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும்.

ஜனநாயக செயல்முறையின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கு வாக்காளர் பட்டியல்கள் குறித்த புகார்கள் அவசியம். அத்தகைய புகார்களை அளிப்பவர்களை கேலி செய்வதும், சித்தரிப்பதும் ஜனநாயகத்தின் மீதான குடிமக்களின் நம்பிக்கையை சிதைத்துவிடும்" என்று தெரிவித்துள்ளார்.

மரம் மனிதனின் உரம்

## சென்னை பல்கலைக்கழகம் புதிய திட்டம்:

# ஒரே நேரத்தில் 2 பட்டப்படிப்புகள் படிக்க மாணவர்களுக்கு அனுமதி?

**சென்னை, ஆக. 19-**

ஒரே நேரத்தில் 2 பட்டப்படிப்புகள் படிக்க மாணவர்களுக்கு அனுமதி அளித்துள்ளதாக சென்னை பல்கலைக்கழகம் திட்ட வட்டமாக கூறியுள்ளது.

சென்னை பல்கலைக்கழகம் கலை மற்றும் அறிவியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவும் வகையில், இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் ஒரே நேரத்தில் 2 பட்டப்படிப்புகளை படிக்க அனுமதிக்க திட்டமிட்டுள்ளது. இந்த கல்வியாண்டு (2025-26) முதல் திறந்த நிலை மற்றும் தொலைதூர கல்வி முறையில் பயிலும் மாணவர்கள் மேலும் ஒரு பட்டப்படிப்பை படிக்க வாய்ப்புள்ளது.

தொலைதூர கல்வி முறையில் படிப்பவர்கள் ஒரே நேரத்தில் 2 பட்டப்படிப்பு படிப்பதற்கான திட்டங்களில் சேர அனுமதிக்கப்படுவார்கள் என்று சென்னை பல்கலைக்கழகம் தயாரித்துள்ள இரட்டை பட்டப்படிப்புகளுக்கான வரைவு வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு வழிகாட்டுதல்கள் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. இந்த இரட்டை பட்டப்படிப்பானது சான்றிதழில் குறிப்பிடப்படும் என்று வழிகாட்டுதல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022-ம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவிப்பை தொடர்ந்து, அதை செயல்படுத்த சென்னை பல்கலைக்கழகம் முடிவு செய்தது. இரட்டை பட்டப்படிப்பு சேர்க்கைக்கான வழிகாட்டுதல்களை வகுக்கும் பணி தொலைதூர கல்வி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

## பீகாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து

# நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் இணையத்தில் வெளியீடு

**பாட்னா, ஆக. 19-**

பீகாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்கள் வெளியீடப்பட்டது.

பீகாரில் தீவிர வாக்காளர் சிறப்பு திருத்தப்பணி முடிந்தநிலையில், கடந்த 1-ம் தேதி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், 7 கோடியே 24 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே இருந்தன. 65 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு இருந்தன.அவர்களில், 22 லட்சத்து 34 ஆயிரம் பேர் இறந்துவிட்டதாகவும், 36 லட்சத்து 28 ஆயிரம் பேர் நிரந்தரமாக இடம்பெயர்ந்து விட்டனர் அல்லது முகவரியில் காணவில்லை என்றும், 7 லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பெயர் சேர்த்து இருப்பதாகவும். அதனால் மேற்கண்ட 65 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது.

இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாய சீர்திருத்த சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன. இந்த வார தொடக்கத்தில் இந்த வழக்கில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்த் தேர்தல் ஆணையம், சட்டப்படி, நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை மனுதாரர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தது. இதனையடுத்து, பீகார் வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணையம் அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் வெளியிட நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும் இதுதொடர்பான அறிக்கையை 22 ஆம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தினர். மக்கள் தெளிவு பெறவும், திருத்தங்களுக்கு விண்ணப்பிக்க ஏதுவாகவும் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் குறித்த வெளிப்படைத்தன்மை தேவை என நீதிபதிகள் தெரிவித்தனர்.மேலும், ஆதார் கார்டுகள் செல்லுபடியாகும் ஆதாரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணையத்தை நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

இந்நிலையில், பீகாரில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டது. இந்தப் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதனிடையே, தேர்தல் ஆணையத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் ஆதாரத்துடன் பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் அரசியல் போரில் வெல்வோம்:

# த.வெ.க. தொண்டர்களுக்கு தலைவர் விஜய் கடிதம்

**சென்னை, ஆக. 19-**

தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம் என்று த.வெ.க. தலைவர் விஜய் தனது தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு ஆக. 21-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இது குறித்து த.வெ.க. தொண்டர்களுக்கு அந்தக் கட்சியின் தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார். த.வெ.க. தலைவர் விஜய் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

மக்களுடன் மக்களாக இணைந்து நிற்கும் மகத்தான மக்கள் அரசியல் இயக்கமான த.வெ.க. மீதான தமிழ்நாட்டு மக்களின் பேரன்பும் பேராதரவும் தேர்தல் அரசியல் களத்தில் விரைவில் நிரூபிக்கப்படப் போகிறது. நமது கனவு நனவாக, இலக்கை எட்ட, புரட்டிப் போடப் போகும் புரட்சி நிகழ, இன்னும் சில மாதங்களே உள்ளன.

1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவுகளை, 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் இந்த மண்ணில் காணப் போகிறோம். மாபெரும் மக்கள் சக்தியான நீங்கள், இந்தத் திருப்புமுனைத் தருணத்தை நிரூபிக்கப் போவது நிச்சயம். இதை 32 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் இயக்கமாக இருந்து, தினம் தினம் மக்கள் மனம் அறிந்து உணர்ந்து வரும் நாம் சொல்வதில் அடர்ந்த, ஆழ்ந்த உண்மை இருப்பதை அனைவரும் அறியத்தான் போகின்றனர்.

தமிழக மக்களை உயிராகப் போற்றி மதிக்கும் இந்த விஜய் பற்றி உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். உங்கள் மீதான உள்ளன்பு மிக்க அக்கறையின் காரணமாக இப்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கர்ப்பிணிப் பெண்கள், கைக் குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறார்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர், நம் கட்சியின் மாநாட்டை வீட்டில் இருந்தபடியே நேரலையில் கண்டு மகிழுமாறு உரிமை கலந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாநாட்டுக்கு வரும்போதும், மாநாடு நிறைவடைந்து ஊருக்குத் திரும்பும்போதும் நம் கட்சித் தோழர்கள் அனைவரும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் ராணுவக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிக்க வேண்டும். தமிழக வெற்றிக் கழகம், தகுதியும் பொறுப்பும் மிக்க ஓர் அரசியல் பேரியக்கம் என்பதை நமது ஒவ்வொரு செயலிலும் காட்ட வேண்டியது நமது தலையாய கடமை. மக்கள் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட 'மனசாட்சி உள்ள மக்களாட்சி' என்னும் உன்னதமான அரசியல் அதிகார இலக்கை நோக்கி உறுதியுடன் பயணிக்கிறோம். மகத்தான தேர்தல் அரசியல் வரலாறு மீண்டும் நம் தமிழ்நாட்டு மண்ணில், நம்மால் நிகழப் போவது நிஜம். எனவே, அத்தகைய மாபெரும் அரசியல் விளைவை நிச்சயமாக நிகழ்த்திக் காட்டும் பேறிவிப்பாக நமது மாநில மாநாட்டை மாற்றிக் காட்டுவோம்.

உங்கள் ஒவ்வொருவருக்காகவும் உணர்வு ததும்பும் மதுரை மண்ணில், இதயம் திறந்து இரண்டு கைகளை விரித்துக் காத்திருப்பேன். உங்கள் விஜய், உரிமையுடன் அழைக்கிறேன். மதுரை பாரபத்தியில் கூடுவோம். தேர்தல் அரசியல் போர் உத்தியில் வெல்வோம்" என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சங்கரன்கோவில் நகராட்சித் தலைவர் தேர்தல்:

# தி.மு.க.வை சேர்ந்த கவுசல்யா வெற்றி

**தென்காசி, ஆக. 19-**

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் நகராட்சியில் 30 வார்டுகள் உள்ளன. கடந்த உள்ளாட்சி தேர்தலில் அதி.மு.க. 12 வார்டுகளிலும், தி.மு.க. 9 வார்டுகளிலும், மதி.மு.க. 2 வார்டுகளிலும், காங்கிரஸ், எஸ்டிபிஐ தலா ஒரு வார்டிலும், சுயேச்சைகள் 5 வார்டுகளிலும் வெற்றி பெற்றனர். நகராட்சி தலைவர் பதவிக்கு தி.மு.க.வை சேர்ந்த உமா மகேஸ்வரி, அதி.மு.க.வை சேர்ந்த முத்து லெட்சுமி ஆகியோர் போட்டியிட்டனர். இதில், இருவரும் தலா 15 வாக்குகள் பெற்றதால் சமநிலை ஏற்பட்டது. இதையடுத்து, குலுக்கல் முறையில் நகராட்சி தலைவராக உமா மகேஸ்வரி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், அதி.மு.க., தி.மு.க. கவுன்சிலர்கள் உட்பட 24 கவுன்சிலர்கள் நகராட்சி தலைவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி நகராட்சி ஆணையரிடம் மனு அளித்தனர். அதன்படி, கடந்த ஜூன் மாதம் 2-ம் தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான குரல் வாக்கெடுப்பு நடைபெற்றது.

மொத்தம் உள்ள 30 உறுப்பினர்களில் தீர்மானத்துக்கு ஆதரவாக 28 கவுன்சிலர்கள் வாக்களித்தனர். நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றதால் நகராட்சி தலைவர் பதவியை உமா மகேஸ்வரி இழந்ததாக அறிவிக்கப்பட்டு, நகராட்சி தலைவர் அலுவலகம் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

பின்னர், குரல் வாக்கெடுப்பு நடத்தியது செல்லாது என அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உமா மகேஸ்வரி மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், தீர்மானம் மீது ஜூலை 17-ம் தேதி மறைமுக வாக்கெடுப்பு நடத்தவும், அதன் முடிவுகளை ஜூலை 18-ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டது. அதன்படி, ஜூலை 18-ம் தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மறைமுக வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் தீர்மானத்துக்கு ஆதரவாக 28 கவுன்சிலர்கள் வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து உமா மகேஸ்வரி நகராட்சி தலைவர் பதவியை இழந்தார்.

இந்நிலையில், நகராட்சியில் காலியாக உள்ள தலைவர் பதவிக்கு நேற்று தேர்தல் நடைபெற்றது. இதையொட்டி நகராட்சி அலுவலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

தி.மு.க. சார்பில் 6-வது வார்டு உறுப்பினர் கவுசல்யா, அதி.மு.க. சார்பில் 26-வது வார்டு உறுப்பினர் அண்ணாமலை புஷ்பம் ஆகியோர் போட்டியிட்டனர். முன்னாள் நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் தி.மு.க. உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. மீதமுள்ள 28 பேர் வாக்களித்தனர்.

நகராட்சி ஆணையாளர் சாம் கிங்ஸ்டன் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவு அறிவிக்கப்பட்டது. இதில் தி.மு.க.வை சேர்ந்த கவுசல்யா 22 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதி.மு.க.வை சேர்ந்த அண்ணாமலை புஷ்பம் 6 வாக்குகள் மட்டும் பெற்றார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தூய்மைப்பணியாளர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்கள் வழங்கப்பட்டாலும் கூட, அவர்கள் பணி செய்யும் காலத்தில் நிலையான பணியாளர்களுக்குரிய ஊதியம் மற்றும் பிற உரிமைகள் வழங்கப்பட வேண்டும். சமுகநீதி என்ற பெயரில் தூய்மைப் பணியாளர்கள் சுரண்டப்படுவதற்கு எவரும் துணை போகக்கூடாது.

**- அன்புமணி**



தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் வெற்றி பெற்று யாரை முதல்-அமைச்சராக அறிவிக்கிறார்களோ அவர்களை நாங்கள் ஏற்று கொள்வோம். நாங்கள் போட்டியிடும் தொகுதிகளை கேட்டு பெறுவோம். வரும் ஜனவரி மாதத்திற்குள் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள குளறுபடிகள் பேசி சரி செய்யப்படும்.

**- டி.டி.வி. தினகரன்**



தூய்மை பணியாளரகளின் பணி நிரந்தரம் செய்வதால் கிடைக்கும் வருமானம், பணி பாதுகாப்பு ஆகிய சேர்ந்து அடுத்த தலைமுறையை இந்த பணியில் இருந்து விடுவித்து உயர் கல்வி பெறுவதற்கும், வேறு வாய்ப்பு கிடைப்பதையும் அந்த குடும்பத்திற்கு ஏற்படுத்தும். இதை யாரும் எதிர்க்க கூடாது.

**- சண்முகம்**



ஒரு தமிழருக்கு கிடைக்கவிருக்கும் மாபெரும் பெருமையை, அரசியல் எல்லைகளைத் தாண்டி எல்லோரும் ஆதரித்தோம் என்று வரலாற்றில் பேசப்பட்டால், அது ஒரு ஆரோக்கியமான அரசியலை ஊக்குவிக்கும். இதற்கு இன்டியா கூட்டணியில் உள்ள கட்சிகளும் ஆதரவு தருவது சிறப்பானதாக இருக்கும்.

**- நயினார் நாகேந்திரன்**

ஈரோடு மாவட்ட

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கலெக்டர் ச.கந்தசாமி குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு.ஆக.19-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 220 மனுக்கள் வரப்பெற்றன.


பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நூர்ஜஹான் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், உதகை நகர் மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு நாடாளுமன்ற தொகுதி அலுவலகத்தில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவிக்கு தனது சொந்த நிதியிலிருந்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் கல்வி உதவித்தொகை வழங்கினார்.

# சக்தி மறுவாழ்வு மையத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா




ஈரோடு, ஆக. 19-

சக்தி மசாலா நிறுவனத்தின் ஓர் அங்கமான சக்தி தேவி அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் சக்தி மன வளர்ச்சிகுன்றியோர் சிறப்புப்பள்ளி சக்தி ஆட்டிசம் சிறப்புப்பள்ளி மற்றும் சக்தி மறுவாழ்வு மையத்தில் சக்தி தேவி அறக்கட்டளை அறங்காவலர்கள் டாக்டர் துரைசாமி மற்றும் டாக்டர் சாந்தி துரைசாமி வழி காட்டுதலின் படி கிருஷ்ணஜெயந்தி திருநாள் கொண்டாடப்பட்டது. விழாவில் ஆசிரியர்கள் சிறப்புப்பள்ளி குழந்தைகளுக்கு கிருஷ்ணனின் பிறப்பு பற்றிய புராண கதைகள் கூறியும் கிருஷ்ணர் பாடல்கள் பாடியும் மகிழ்வித்தனர். விழாவில் சக்தி தேவி அறக்கட்டளையின் வழிகாட்டி திட்ட பொறுப்பாளர் ராஜமாணிக்கம் வழிகாட்டி திட்ட நூலக ஒருங்கிணைப்பாளர் நாகேஷ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றினார்கள். சுமார் 120 குழந்தைகள் அவர்தம் பெற்றோர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் இணைந்து பூஜை செய்து வழிபாடு செய்தனர்.



ஈரோடு ஊராட்சி ஒன்றியம், பிச்சாண்டாம்பாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை: பவானிசாகர் அணைக்கு 5 ஆயிரம் கன அடியாக நீர்வரத்து அதிகரிப்பு

ஈரோடு, ஆக.19-

ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணை மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெற்று வருகின்றன. நீர் பிடிப்பு பகுதியான நீலகிரி பகுதியில் பலத்த மழை பெய்ததால் கடந்த மாதம் 27-ம் தேதி 32 -வது முறையாக பவானிசாகர் அணை 100 அடியை எட்டியது. . இந்நிலையில் மீண்டும் மழை பெய்ததால் நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. இதனால் பவானிசாகர் அணை 101 அடியை எட்டியது. இந்நிலையில் நீர்பிடிப்பு பகுதியில் மழை பொழிவு இல்லாததால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் குறைய தொடங்கியது. எனினும் நீர்வரத்தை விட பாசனத்திற்கு தொடர்ந்து அதிக அளவு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

நேற்று காலை பவானிசாகர் அணை நீர்மட்டம் 101.65 அடியாக உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் அணைக்கு வினாடிக்கு 5,164 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 2, 200 கன அடியாக அதிகரித்து திறக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் 3,100 கன அடி நீர் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து பவானிசாகர் அணை 101 கன அடியில் நீடித்து வருகிறது. குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம்

நேற்று காலை நிலவரப்படி 20.01 அடியாக உள்ளது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 13.61 அடியாக உள்ளது. வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 22.08 அடியாக உள்ளது. ஒருபுறம் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில் மற்ற அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நீலகிரி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி, ஆக.19-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நேற்று (18.08.2025) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 92 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை சார்பில், பல்வேறு இடங்களில் நடந்த வாகன விபத்தில் பெருங்காயம் அடைந்த 6 நபர்களுக்கு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினையும், குன்னூர் காட்டேரி பால்கார லைன் பகுதியில் வசித்து வந்த பாபு என்பவர் வாகன விபத்தில் உயிரிழந்தார். அன்னாரது வாரிசுதாரரான திலகவதி என்பவருக்கு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூ.67,000-க்கான காசோலையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், அழிவின் விழிம்;பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஊட்டி ஊராட்சி ஒன்றியம் நஞ்சநாடு ஊராட்சி பகல்கோடு மந்து, நீலகிரி பழங்குடியின பாரம்பரியம் மற்றும் கலாச்சாரா பாதுகாப்பு சங்கத்திற்கு பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் இயந்திரம் வாங்குவதற்கு ஏதுவாக ரூ.2.02 இலட்சத்திற்கான காசோலையினையும், தோடர் எருமைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பகல்கோடு மந்து தோடர்களுக்கான பால்சேகரிப்பு மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் விற்பனை நிலையத்திற்கு, தேவையான இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.3.08 இலட்சத்திற்கான காசோலையினையும்; மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் பழனிச்சாமி (நிலம்), கண்ணன் (கணக்குகள்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# 1600 விநாயகர் சிலைகள் வைத்து வழிபட அனுமதி: போலீசார் தகவல்

ஈரோடு, ஆக.19-

விநாயகர் சதுர்த்தி வரும் 27ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, ஆண்டுதோறும் இந்து அமைப்புகள் மட்டுமின்றி தனியார் சார்பிலும், சில அமைப்புகள் சார்பிலும், பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு நடத்துவது வழக்கம். வழிபாட்டுக்கு பின் குறிப்பிட்ட நாளில் அருகில் உள்ள நீர் நிலைகளில் கரைப்பர். இந்தாண்டு விநாயகர் சிலை கொண்டாட்டத்தை சட்டம் ஒழுங்கு பிரச்னையின்றி அமைதியாக நடத்துவது குறித்த ஆலோசனையில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.இது பற்றி போலீசார் கூறியதாவது:-

கடந்தாண்டை போலவே இந்தாண்டும் மாவட்டத்தில் 1,600 விநாயகர் சிலைகள் வைத்து வழிபட அனுமதிக்கப்படும். 10 அடி உயரத்துக்கு மேல் சிலைகள் இருக்க கூடாது. தகர ஷீட்டில் பந்தல் அமைக்க வேண்டும். ஊர்வலத்தில் அமைதியாக பொதுமக்களுக்கு, பிற வழிபாட்டு தலங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் செல்ல வேண்டும். விநாயகர் சிலைகளை, அவற்றை வைக்க ஏற்பாடு செய்பவர்களே பாதுகாத்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகள் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிதாக விநாயகர் சிலைகள் வைக்க அனுமதி வழங்கப்படாது. பொது இடத்தில் விநாயகர் சிலை வைக்க ஆர்.டி.ஓ.வை அணுகி அனுமதியை பெற்று கொள்ள வேண்டும். விநாயகர் சிலைகளை வைத்த பின்னர் தான் சரியான எண்ணிக்கை தெரிய வரும். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்

# 2002 - 2021 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி பழைய பாடத்திட்டம் முடிவு கட்டுதல் தேர்வு

## மாணவ மாணவியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

ஈரோடு ஆக 19-

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஓர் அங்கமாக செயல்பட்டு வரும் ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை 7 பாடத்திட்டங்கள் கொண்ட முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி மற்றும் அஞ்சல்வழி கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

2022ஆம் ஆண்டு முதல் அனைத்து கூட்டுறவு மேலாண்மை நிலையங்களிலும் புதிய பாடத்திட்டத்தின்படி (10 பாடங்கள்) இரண்டு பருவமுறைகளாக பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, பழைய பாடத்திட்டத்தின்படி (7 பாடங்கள்) தேர்ச்சி பெறாத பயிற்சியாளர்களுக்கு துணைத் தேர்வினை நடத்திடவும், அவ்வாறு துணைத்தேர்வில் கலந்துகொள்ளாத பயிற்சியாளர்கள் இனிவரும் காலங்களில் புதிய பாடத்திட்டத்தின்படி முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்றால் மட்டுமே பட்டயச் சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் 2025-இல் நடத்த தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் திட்டமிடப்பட்டுள்ளதால் 25.08.2025க்குள் கூட்டுறவு மேலாண்மை நிலைய அலுவலகம் வந்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.மேலும், விவரங்களுக்கு ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையம், எண்.5, வாய்க்கால்மேடு, S.V.N.பள்ளி பின்புறம், கொங்கம்பாளையம் பிரிவு, சித்தோடு 638102 என்ற முகவரியிலோ அல்லது 0424-2998632, 9489240485 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் .ப.கந்தராஜா தெரிவித்தார்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகள் வெளியீடு

ஈரோடு, ஆக.19-

நாடு முழுவதும் வரும் 27-ம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவுள்ள நிலையில், ஈரோடு மாவட்டத்தில் விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஈரோடு மாவட்ட நிர்வாகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது : -

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்றுதொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

களி மண், பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) இல்லாத மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க வேண்டும்.

சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் பொருட்களை பயன்படுத்த கூடாது. நீர் நிலைகள் மாசுபடுவதை தடுக்கும் வகையில், வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள், பந்தங்கள்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும்.

சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத ரசாயன சாயம், எண்ணெய் வண்ணப் பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப் பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது. மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு கந்த நீர் சார்ந்த, மக்கக்கூடிய, நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு இரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு, மாவட்ட கலெக்டர், மாவட்ட எஸ்பி மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை அணுகலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊட்டியில்

# மாணவர்களுக்கான வாழ்வியல் நன்னெறி வகுப்பு

ஊட்டி, ஆக.19-

தமிழியக்கம் மற்றும் நீலகிரி கல்வி அறக்கட்டளை சார்பில் ஊட்டியில் வாழ்வியல் நன்னெறி வகுப்பு நடைபெற்றது.

ஊட்டி நகராட்சி காந்தள் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் மாணவர்களுக்கான வாழ்வியல் நன்னெறி வகுப்பு நடைபெற்றது.

நீலகிரி கல்வி அறக்கட்டளை நிறுவனர் தலைவர் ஜாபர் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விந்தினர்களாக கலந்து கொண்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சோமசுந்தரம் திருக்குறள் வாழ்வியல் என்ற தலைப்பில் உரையாற்றினார்.



அப்போது மாணவர்கள் இளம் வயதிலிருந்தே புத்தகங்ளைச் சேகரித்து ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் அமைக்க வேண்டும் என்றார். மருத்துவர் முகமது ஈசா போட்டித் தேர்வுகளை கையாளும் உத்திகள் குறித்து விளக்கிக் கூறினார்.

நூலகர் வாசகர் வட்டத் தலைவி நல்லாசிரியர் அமுதவல்லி தமிழும் தொன்மையும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் 60 மாணவர்களுக்கு எழுதுகோல் மற்றும் பேஜ் வழங்கப்பட்டது. நூலகர் காயத்திரி நன்றி கூறினார்.

தமிழியக்கம் மாவட்ட செயலாளர் புலவர் இர.நாகராஜ் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார்.

ஊட்டி வண்டிச்சோலையில்

# 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் கோவில் சேதம்: போக்குவரத்து பாதிப்பு

ஊட்டி, ஆக.19-

தொடர் மழை காரணமாக ஊட்டியில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் கோவில் சேதமடைந்தது. சாலையில் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவிகிறது. மேலும் வடக்கு கேரளா பகுதிகளுக்கு மத்தியகிழக்கு தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

அதன்படி நீலகிரி மாவட்டம் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. இந்தநிலையில், நேற்று முன்தினம் மாலை முதல் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஊட்டி நகரில் உள்ள வண்டிச்சோலை பகுதியில் இருந்த நூற்றாண்டு பழமையான ராட்சத மரம் திடீரென வேரோடு சாய்ந்து விழுந்தது. மரம் விழுந்ததில் அங்கிருந்த சங்கிலி முனீஸ்வரர் கோவில் இடிந்து சேதமடைந்தது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் ராட்சத மரத்தை 2 மணி நேரத்திற்கு மேலாக வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டனர். மரம் விழுந்த போது அந்த வழியாக யாரும் செல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

மரம் விழுந்ததில் மாட்டு கொட்டகையும் சேதமடைந்த நிலையில் கொட்டகையில் இருந்த மாடுகள் தப்பின. மேலும் மரம் விழுந்ததால் அந்த பகுதியில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதேபோல் கூடலூர் மற்றும் பந்தலூர் தாலுகாக்களில் கன மழை கொட்டி தீர்க்கிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

கோத்தர் வயல் பகுதியில் வயல்கள் மற்றும் வாழை தோட்டங்களில் தண்ணீர் சூழ்ந்தது. இதனால் மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. மாவட்டத்தில் கன மழை பெய்து வரும் நிலையில், பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்காததால், மாணவர்கள் கன மழையில் நனைந்தபடியே பள்ளிக்கு சென்று வந்தனர். கேரட் அறுவடைக்கு சென்ற தொழிலாளர்கள் கடும் அவதி அடைந்தனர். தொடர்மழையின் காரணமாக கடும் குளிர் நிலவுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைந்து வெறிச்சோடியது.

இந்தநிலையில், நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் மேல் கூடலூரில் 138 மில்லிமீட்டர் மழை பதிவானது.

இதேபோல் கூடலூரில் 136, மேல் கூடலூரில் -138, தேவாலா 94, சேரங்கோடு 78, பார்சன்ஸ் வேலி 74, அவலாஞ்சி 73, ஓவேலி 71, நடுவட்டம் 68, பந்தலூர் 62, கிளன்மார்கன் 66, செருமுள்ளி 45, பாடந்தொறை 40, போத்திமந்து 42, ஊட்டி-15 மி.மீட்டர் மழையும் பதிவானது. இதில் அதிகபட்சமாக மேல்கூடலூரில் 138 செ.மீ. மழை பதிவானது.

# சென்னை ராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகன சுரங்க பாதை: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்



சென்னை,ஆக.19

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (18.8.2025) இராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகனச் சுரங்க பாதையினை திறந்து வைத்து பார்வையிட்டார்.வட சென்னை கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள போஜராஜன் நகர் மூன்று புறமும் இரயில்வே இருப்புப் பாதையினால் சூழப்பட்டுள்ளதால், இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ரயில்வே சந்திப்பு கடவின் மூலமே வெளியே செல்ல முடியும்.

மேலும் அவசர காலங்களில் அவர்களால் வெளியே செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. எனவே இங்கு வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்ட வடசென்னைப் பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, போஜராஜன் நகரில் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை (Limited Use Subway) அமைக்கும் பணி கடந்த 2023 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது.

இச்சுரங்கப்பாதையின் நீளம் 207மீட்டர் (இரயில்வே பகுதி 37 மீட்டர் உட்பட), அகலம் 6 மீட்டர் ஆகும். மேலும், மழைக் காலங்களில் மழை நீரை வெளியேற்ற ஒரு நீர் சேகரிக்கும் கிணறு, 85HP திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மற்றும் ஒரு ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளன. இப்பணியின் மூலம் போஜராஜன் நகர், சீனிவாசன் நகர் மற்றும் மின்ட் மார்டன் சிட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.மேலும், போஜராஜன் நகர் வாகனச் சுரங்கப்பாதையினையொட்டி 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் விளையாட்டுத் திடல், ரவுண்டானா பூங்கா மேம்பாட்டுப் பணிகள், ரவுண்டானாவைச் சுற்றிலும் நடைபாதை மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கான ஓய்வுக்கூடம், ஆகியவற்றையும் துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்கள்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ஊட்டி, குன்னூரில் இன்று நடக்கிறது

ஊட்டி, ஆக.19-

ஊட்டி, குன்னூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று நடக்கிறது. இது குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் எனஅறிவித்திருந்தார். அதன்படி தமிழ்நாட்டில் உள்ளஅனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில்,'உங்களுடன் ஸ்டாலின்'என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக'உங்களுடன் ஸ்டாலின்' திட்டமுகாமானது கடந்த15.07.2025 முதல் 14.08.2025 வரைஉதகமண்டலம்,கோத்தகிரி,குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள்,பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக 66 முகாம்கள் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, இரண்டாம் கட்ட'உங்களுடன் ஸ்டாலின்'; திட்ட முகாம் எதிர்வரும் 19.08.2025 முதல் 12.09.2025 வரை உதகமண்டலம், குந்தா, கோத்தகிரி, குன்னூர், கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 19.08.2025 அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 29 மற்றும் 30-ற்கான முகாம் பெட்போர்டு பாரதியார் மண்டபத்திலும், உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்டவார்டு 5, 15 மற்றும் 16-ற்கான முகாம் தேவாங்கர் திருமண மண்டபத்திலும், கோத்தகிரி வட்டம், குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் குஞ்சப்பனை பல்நோக்குகட்டிடத்திலும், உதகமண்டலம் வட்டம், கடநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் தாவணெ சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால்,தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்குபட செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்து கொண்டு, கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக் கொண்டுள்ளார்.

# எம்.ஜி.ஆர் நகரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: பிரபாகர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சென்னை ஆக 19-

சென்னை மாநகராட்சி - 137 வது வார்டில் சென்னை மாநகராட்சி கணக்கு நிலைக் குழு தலைவர் க.தனசேகரன் தலைமையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை அதிகாரிகள் மூலம் மேற்கொண்டு உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விருகம்பாக்கம் சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கழக வர்த்தகர் அணி மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், மண்டல குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, பகுதி கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கே.கண்ணன், மு.இராசா, பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் பா.வாசுகிபாண்டியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எனது மகள் கனிமொழி தனசேகரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.சசிகுமார் வட்ட செயலாளர்கள் கே.சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், ஜம்பு முருகன், எஸ்.மைக்கேல், மாவட்ட பிரதிநிதிகள் என்.ரவி, பா.தினேஷ்குமார், டி.எஸ்.பி.தென்னரசு, த.முத்துமாரியப்பன், எஸ்.சண்முகம், கே.முருகன், வட்ட துணைச் செயலாளர் அ.அசோக்குமார், மாணவர் அணி ஆர்.சுதாகரன் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.

ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றம்
M.A.C.O.P.No.291/2022
திருமதி. ஷமீம்
.....மனுதார்
-- எதிர் --
கார்த்திகேயன்
த/பெ. செந்தில்நாதன்
ஸ்ரீ மகாலெட்சுமிநகர்,
மாஸ்கோநகர்,
சரண் தியேட்டர் அருகில்,
திருப்பூர் டவுன்,
திருப்பூர் மாவட்டம்.
.....1-ம்எதிர்மனுதார்
அறிவிப்பு
மேற்படி நம்பர் வழக்கில் கடந்த 19.05.2018-ம் தேதி நடந்த வாகன விபத்தில் ஷமீம் என்பவருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்காக நஷ்டஈடு கோரி 1-ம் எதிர்மனுதாரர் ஆகிய தங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிர் வழக்கில் தாங்கள் ஆஜராகுவதற்காக வருகின்ற 03.09.2025-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்று காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் தாங்களை பொறுத்தவரை ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
R.பழனிச்சாமி,B.A.,B.L.,
வழக்கறிஞர், ஒட்டன்சத்திரம்.

நாட்டுக்கு சுதந்திரம்
கிடைத்தது நமக்கு
பெருமை
நாட்டை சுத்தமாக
வைப்பது நமது கடமை

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் இணையம் மூலம் முன்பதிவு செய்ய நாளை வரை நீட்டிப்பு

ஊட்டி, ஆக.19-

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க ஆன்லைனில் முன்பதிவு செய்வதற்கான கால அவகாசம் வரும் 20-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து நீலகிரி மாவட்ட விளையாட்டு அலுவலர் இந்திரா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2025 விளையாட்டு போட்டிகளுக்கான இணையதள முன்பதிவு கடந்த மாதம் 14-ந் தேதி முதல் இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 10 லட்சம் போட்டியாளர்கள் முன்பதிவு செய்திருந்தனர். முன்பதிவிற்கான கடைசி நாள் கடந்த 16-ந் தேதி என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்தநிலையில் பொதுமக்கள், பள்ளி கல்லூரி மாணவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் என அனைத்து பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க இணையதள முன்பதிவு செய்வதற்கான கால அவகாசம் வரும் 20-ந் தேதி இரவு 8 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டு உள்ளது.மாணவர்கள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீலகிரி மாவட்ட விளையாட்டு அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம். ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வானகரத்தில் காரில் கடத்தி வரப்பட்ட 750 கிலோ குட்கா பறிமுதல்

சென்னை ஆக 19-

பெங்களூரில் இருந்து சென்னைக்கு விற்பனைக்காக கொண்டு வந்த இருவரை போலிசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரவாயல் அடுத்த வானகரம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக சுற்றித்திரிந்த கார் ஒன்றை மடக்கி போலீசார் சோதனை செய்தனர். அப்போது காரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா போதை பொருள் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து காரை பறிமுதல் செய்த போலீசார் காரில் இருந்த இருவரையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை செய்ததில் பிடிபட்ட நபர்கள் பெங்களூர் பகுதியை சேர்ந்த பூரி(23) வைசெட் (22) என தெரிய வந்தது. மேலும் இவர்கள் பெங்களூரில் இருந்து குட்கா போதை பொருட்களை மொத்தமாக வாங்கி வந்து சென்னையில் உள்ள பல்வேறு கடைகளுக்கு சப்ளை செய்து வந்ததும் விசாரணையில் தெரியவந்தது இதனைஅடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் இருந்து 750 கிலோ குட்காவையும் கடத்தலுக்கு பயன்படுத்திய காரையும் போலீசார் பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொலை வழக்கில் தலைமறைவான குற்றவாளி கைது

சென்னை ஆக 19-

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் நீதிமன்ற விசாரணை நிலுவை வழக்குகளில் அதிக முக்கியத்துவம் வழங்கி எதிரிகளுக்கு உரிய நீதிமன்ற தண்டனை பெற்று தந்து, பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி பெற்று தந்திட, 12 காவல் மாவட்டங்களிலும் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்திட, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 03.02.2019 அன்று தண்டையார்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரவி என்பவரை கொலை செய்தது தொடர்பாக, தண்டையார்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி ராம்கி (எ) ராம்குமார் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர் நீதிமன்ற பிணையில் சென்ற ராம்கி (எ) ராம்குமார் 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி ராம்கி (எ) ராம்குமார் என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கடந்த 08.08.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. தண்டையார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சரித்திரப்பதிவேடுகுற்றவாளி ராம்கி (எ) ராம்குமார், என்பவரை கைது செய்தனர்.

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்

# பிளாஸ்டிக் பயன்படுத்தாத உணவகங்களுக்கு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் ரூ.1 லட்சம் விருது

## விருப்பமுள்ள உணவு வணிகர்கள் விண்ணப்பிக்கலாம்

ஊட்டி, ஆக.19-

பி;ளாஸ்டிக் பயன்படுத்தாத உணவகங்களுக்கு தமிழ்நாடு அரசால் உணவு பாதுகாப்பு துறையின் மூலம் ரூ.1 லட்சம் விருது வழங்கப்படும் எனவும், விருப்பமுள்ள உணவு வணிகர்கள் விண்ணப்பிக்கலாம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் உணவு பாதுகாப்பு துறையால் அனுமதிக்கப்படாத ப்ளாஸ்டிக் ஆகியவற்றை உணவு பரிமாறவும், பார்சல் செய்யவும் பயன்படுத்தாமல் உள்ள பெரிய வகை உணவகங்களுக்கு உணவு பாதுகாப்பு துறையால் ரூ.1,00,000- (ஒரு இலட்சம்) தொகையுடன் கூடிய விருதும், தெருவோர வணிகர்கள் உள்ளிட்ட சிறு வணிகர்களுக்கு ரூ.50,000- (ஐம்பதினாயிரம்) தொகையுடன் கூடிய விருதும் வழங்கப்படவுள்ளது. அதற்கு விருப்பமுள்ளவர்கள் வரும் 31.08.2025-க்குள் விண்ணப்பம் செய்யலாம்.

மேலும், தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் உணவு பாதுகாப்புத் துறையால் அனுமதிக்கப்படாத பி;ளாஸ்டிக் ஆகியவற்றை உணவு பரிமாறவும், பார்சல் செய்யவும் பயன்படுத்தாமல், மக்கும் தன்மையுள்ள பொட்டலமிடும் பொருட்களை மட்டும் உணவு விநியோகிக்கவும், பார்சல் செய்யவும் பயன்படுத்தும் மிகச் சிறந்த பெரிய வகை உணவகங்களுக்கு, அதாவது வருடாந்திர விற்றுக் கொள் முதல் ரூ.12 இலட்சத்திற்கும் மேற்பட்ட உணவு வணிகர்களுக்கு, தமிழ்நாடு அரசின் உணவு பாதுகாப்புத் துறையால் ரூ.1,00,000- (ஒரு இலட்சம்) தொகையுடன் கூடிய விருதும், தெரு வோர வணிகர்கள் உள்ளிட்ட சிறு வணிகர்களுக்கு ரூ.50,000- (ஐம்பதினாயிரம்); தொகையுடன் கூடிய விருதும் வழங்கப்படவுள்ளது. அதற்கு விருப்பமுள்ளவர்கள் வரும் 31.08.2025-க்குள் உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்யலாம்.

அவ் விண்ணப்பங்கள் மாவட்ட கலெக்டர் தலைமையிலான நியமன அலுவலர் உள்ளடக்கிய குழுவினர் பரிசீலனை செய்து, மூன்றாம் நபர் தணிக்கை நிறுவனம் மூலம் சம்பந்தப்பட்ட உணவகத்தினை கள ஆய்வு செய்து, கூட்டாய்வு குழு தமது பரிந்துரையை உணவு பாதுகாப்பு துறை ஆணையருக்கு சமர்பிப்பர். அதன் பின்னர், மாநில அளவிலான பரிசீலனைக் குழு பரிசீலித்து, மாவட்டத்திற்கு தலா ஒரு பெரிய உணவகத்தையும், ஒரு சிறு உணவகத்தையும் சிறந்த உணவகங்களாகத் தேர்ந்தெடுத்து விருது வழங்கப்படும்.

### சிறந்த உணவகங்களுக்கான விருதில் பங்கேற்க தகுதிகள்

விண்ணப்பதாரர் உணவு பாதுகாப்புத் துறையின் உரிமம் பதிவுச் சான்றிதழ் பெற்று, அது நடப்பில் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரரின் உணவகத்தில் குறைந்தபட்சம் ஒரு நபர் உணவு பாதுகாப்பு பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் உணவகத்தில் அனைத்து பணியாளர்களுக்கும் தொற்றுநோய்த் தாக்கமற்றவர்கள் என்பதிற்கான மருத்துவச் சான்று அவசியம் இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் உணவகத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் சுகாதாரத் தணிக்கை மேற்கொண்டு, சுகாதார மதிப்பீட்டுச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரரின் உணவகத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் அதிக ஆபத்துள்ள உணவு வணிக வகைக்கான தணிக்கை மேற்கொண்டு அறிக்கை வைத்திருக்க வேண்டும்.விண்ணப்பதாரர் தமது உணவகத்தை உணவகத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகத்தினால் வழங்கப்பட்டுள்ள சரிபார்ப்பு பட்டியல் மூலம் தாமே தணிக்கை மேற்கொண்டு, அதனை சமர்ப்பிக்க வேண்டும். எனவே, உணவு வணிகர்களும் தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் ப்ளாஸ்டிக் மற்றும் உணவு பாதுகாப்புத் துறையால் அனுமதிக்கப்படாத பி;ளாஸ்டிக் ஆகியவற்றைத் தவிர்த்து, மக்கும் தன்மையுள்ள பொட்டலமிடும் பொருட்களைப் பயன்படுத்தி, சுற்றுப்புற சூழலை பாதுகாக்க உதவும். மேலும் விபரங்களுக்கு நியமன அலுவலர் அலுவலகம், அறை எண் 9 மற்றும் 10, 1-டீ பிளாக், கூடுதல் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், பிங்கர் போஸ்ட், உதகமண்டலம் - 643 006 என்ற முகவரியில் உள்ள மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அலுவலகத்தினை அணுகிடுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்

தமிழ்நாடு அரசு
தஞ்சாவூர் மாவட்டம் பேரூராட்சிகள் நிருவாகம்
வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி
15–வது நிதிக்குழு ஆணையம் சுகாதார மானியம் 2025–2026
ந.க.எண்.136/2025அ1 ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு (Two Cover System) நாள்: 14.08.2025
1. முழுமையானவிபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரால் 15–வது நிதிக்குழு ஆணையம் சுகாதார மானியம் 2025–2026– ரூ. 65.00 இலட்சம் மதிப்பீட்டில் வல்லம் பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் BPHU கட்டடம் கட்டுவது ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக இரு உறைமுறையில் (Two Cover System) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 18.08.2025 முதல் 04.09.2025 வரை உள்ளகால இடைவெளியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள். | 04.09.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 04.09.2025 மாலை 3.30 மணி |

(ஒம்) செல்வராணி கல்யாணசுந்தரம்
தலைவர், வல்லம் பேரூராட்சி மன்றம்
தஞ்சாவூர் மாவட்டம்.
(ஒம்) பா.ராஜசேகர்,
செயல்அலுவலர், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ/4448/ஒப்பந்தப்புள்ளி/2025

கடலூர் மாநகராட்சி
மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
இரட்டை உறை முறையில்
ஆணையாளர், கடலூர் மாநகராட்சி.

தமிழ்நாடு அரசு - பேரளம் முதல்நிலைப் பேரூராட்சி
பேரளம் பேரூராட்சி அலுவலகம், பேரளம், திருவாரூர் மாவட்டம் - 609 405
E-mail: peralamtp@gmail.com
ந.க.எண்.54 / 2025 / அ1 மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் : 12.08.2025
பேரளம் பேரூராட்சியில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 1998 மற்றும் 2000-ன்படியான கீழ்க்காணும் பணிகளுக்கு இணையதளம் வழியாக (இணைய தள முகவரி https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணி விபரம் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பு (ரூ. லட்சத்தில்) | வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | 15வது ஆணைய சுகாதார மான்யம் 2025 - 2026 திருவாரூர் மாவட்டம் பேரளம் பேரூராட்சிக்குட்பட்ட கீழத்தெருவில் புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுதல் | ரூ. 150.00 இலட்சம் | ரூ. 1,50,000/- | 12 மாதங்கள் |

ஒப்பந்தப்புள்ளிகள் 08.09.2025 மாலை 3.00 மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வழியாக பெறப்படும். மேலும் விபரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரி வழியாகவும், அலுவலக நேரத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.
கீதா நாகராஜன்
பேரூராட்சி மன்றத் தலைவர்
செ.ம.தொ.இ / 4430 / ஒப்பந்தப்புள்ளி / 2025
அ.மோகனாம்பாள்
செயல் அலுவலர்

### ஆசிய கோப்பை கிரிக்கெட்:

# இந்திய அணியை இன்று அறிவிக்கிறது தேர்வுக்குழு

**மும்பை, ஆக. 19-**

இந்திய டி20 அணியில் மீண்டும் ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் ஜிதேஷ் சர்மாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட கூடும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்று (ஆக.19) இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தேர்வுக்குழு ஆசிய கோப்பை தொடருக்கான இந்திய அணியை தேர்வு செய்து அறிவிக்க உள்ளது.



**ஸ்ரேயஸ் மற்றும் ஜிதேஷ்...**

ஸ்ரேயஸ் மற்றும் ஜிதேஷ் என இருவரும் ஐபிஎல் 2025 சீசனில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தனர். இந்திய டி20 அணியில் ஸ்ரேயஸ் ஐயர் கடைசியாக கடந்த 2023 டிசம்பரில் விளையாடி இருந்தார். ஜிதேஷ் சர்மா கடந்த 2024 ஜனவரியில் இந்தியாவுக்காக டி20 கிரிக்கெட்டில் விளையாடினார். கவுதம் கம்பீர் தலைமை பயிற்சியாளராக பொறுப்பேற்றது முதல் இருவரும் இந்திய டி20 அணியில் விளையாடும் வாய்ப்பினை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரது பயிற்சியின் கீழ் 15 டி20 போட்டிகளில் 13 வெற்றிகளை இந்தியா பெற்றுள்ளது.

**8 அணிகள்...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் செப்டம்பர் மாதம் 9-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இதில் இந்தியா உட்பட 8 அணிகள் பங்கேற்கின்றன. டி20 பார்மெட்டில் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தியா பங்கேற்கும் போட்டிகள் அனைத்தும் துபாயில் நடைபெறுகிறது. சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான துபாய் ஆடுகளத்தில் நடுவரிசை மற்றும் பின்வரிசை பேட்ஸ்மேன்களின் அனுபவம் மிகவும் அவசியம்.

அதை கருத்தில் கொள்ளும் போது ஸ்ரேயஸ் அணியில் இடம்பெற வாய்ப்புள்ளது. அவர் விளையாடினால் ஷிவம் துபே அல்லது ரிங்கு சிங் ஆகியோரில் யாரேனும் ஒருவருக்கு ஆடும் லெவனில் வாய்ப்பு இருக்காது. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் ஸ்ரேயஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார். அந்த தொடரில் இந்தியா விளையாடிய போட்டிகள் அனைத்தும் அமீரகத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**சஞ்சு சாம்சன்...**

இதே போல விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜிதேஷ் சர்மா, துருவ் ஜுரேலுக்கு மாற்றாக அணியில் இடம்பெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. சஞ்சு சாம்சன் அணியில் பிரதான விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக விளையாட வாய்ப்புள்ளது. அவருக்கு துணையாக ஜிதேஷ் சர்மா அணியில் இடம் பெறுவார் என தகவல்.

**பும்ரா தயார்...**

நாளை நடைபெறும் தேர்வுக்குழு கூட்டத்தின் டி20 அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவும் பங்கேற்கிறார். அவரது கருத்துக்கும் இந்த கூட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். ஆசிய கோப்பை தொடரில் விளையாட பும்ரா தயார் என கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இருந்தாலும் அவரை விளையாட வைத்தால் இந்திய அணி பலப்பரீட்சை மேற்கொள்ளுமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. பும்ரா விளையாடாத பட்சத்தில் பிரசித் கிருஷ்ணாவுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கக்கூடும்.

இதேபோல் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வாலுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. பந்துவீச்சாளர்களில் வருண் சக்கரவர்த்தி, அர்ஷ்தீப் சிங், குல்தீப் யாதவ் ஆகியோர் நிச்சயம் அணியில் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### துலீப் டிராபி தொடர்:

# இஷான் கிஷன் விலகல்

**புதுடெல்லி, ஆக. 19-**

துலீப் டிராபி தொடரில் இருந்து இஷான் கிஷன் நீக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக அவர் தொடரில் இருந்து விலகி உள்ளதாக ஒடிசா கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் ஒன்றான துலீப் கோப்பை கிரிக்கெட் தொடரின் நடப்பு சீசன் வரும் 28-ம் தேதி முதல் பெங்களூருவில் தொடங்க உள்ளது. இதில் மேற்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டல அணிகள் நேரடியாக அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளன.

**பிளே ஆப் போட்டி...**

வடக்கு மண்டலம், கிழக்கு மண்டலம், வடகிழக்கு மண்டலம் மற்றும் மத்திய மண்டல அணிகள் பிளே ஆப் (காலிறுதி) போட்டிகளில் விளையாடவுள்ளன. இதில் முதல் பிளே ஆப் போட்டியில் வடக்கு மண்டலம் - கிழக்கு மண்டலம் அணிகளும், இரண்டாவது பிளே ஆப் போட்டியில் மத்திய மண்டலம் மற்றும் வடகிழக்கு மண்டலம் அணிகளும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இப்போட்டிகள் வரும் 28-ம் தேதி நடைபெறவுள்ளன.

**காயம் காரணமாக...**

இதையடுத்து இப்போட்டியில் பங்கேற்கும் அணிகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த தொடருக்கான கிழக்கு மண்டல அணியின் கேப்டனாக இஷான் கிஷன் நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், துலீப் டிராபி தொடரில் இருந்து இஷான் கிஷன் நீக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக அவர் தொடரில் இருந்து விலகி உள்ளதாக ஒடிசா கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. அவருக்கு பதில் ஆஷிர்வாட் ஸ்வைன் மாற்று வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

### ஆசிய கோப்பை தொடர்:

# இந்திய அணியில் கே.எல்.ராகுல் இடம்பெற வாய்ப்பு உள்ளதா..?

### ஆகாஷ் சோப்ரா கருத்து

**மும்பை, ஆக. 19-**

ஆசிய கோப்பை தொடரில் இந்திய அணியில் கே.எல்.ராகுல் இடம்பெற வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து ஆகாஷ் சோப்ரா தனது கருத்தை கூறியுள்ளார்.



**2 பிரிவுகளாக...**

நடப்பு சாம்பியன் இந்தியா உள்பட 8 அணிகள் பங்கேற்கும் 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ம்தேதி முதல் 28-ம்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. அடுத்த வருடம் நடைபெற உள்ள ஐ.சி.சி. டி20 உலகக்கோப்பைக்கு ஆசிய அணிகள் தயாராகும் பொருட்டு இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**‘ஏ’ பிரிவில்....**

அதன்படி ‘ஏ’ பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், ‘பி’ பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும்.

**கே.எல்.ராகுல்...**

இந்த நிலையில், ஆசிய கோப்பை தொடருக்கான இந்திய அணியில் கே.எல்.ராகுல் இடம்பெற வாய்ப்பு உள்ளதா..? என்பது குறித்து ஆகாஷ் சோப்ரா தனது கருத்தை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, கே.எல் ராகுல் உண்மையிலேயே அற்புதமான வீரர் தான். ஐ.பி.எல் தொடர்களை எடுத்துப் பார்த்தால் கடந்த சில சீசன்களாகவே அவர் 600 ரன்களுக்கு மேல் அடித்துள்ளார்.

**தடுமாறுகிறார்....**

ஆனாலும், டி20 கிரிக்கெட்டில் பொறுமையாக விளையாடுகிறார் என்ற மோசமான பெயர் அவர்மீது விழுந்துவிட்டது. கே.எல்.ராகுல் அதிரடியாக விளையாடுவதை ஏதோ தடுப்பதாக நினைக்கிறேன். ஏனெனில் நெருக்கடியான கட்டங்களின் போது அவர் தடுமாறுகிறார். மனதளவில் உறுதியாக இருந்தால் நிச்சயம் அவரால் மிகச் சிறப்பாக விளையாட முடியும்.

**நிலையான...**

பும்ராவுக்கு எதிராக ஐ.பி.எல் போட்டிகளின் போது ஒருமுறை அவர் கவர் திசையில் அடித்த சிக்சரை நான் மறக்க மாட்டேன். என்னை பொறுத்தவரை தற்போதைய இந்திய டி20 அணியில் அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன், யஷஸ்வி ஜெய்ஸ்வால், சுப்மன் கில் என பல வீரர்கள் தங்களது நிலையான இடத்திற்காக காத்திருக்கின்றனர்.

**மிடில் ஆர்டர்...**

எனவே, கே.எல்.ராகுலின் கதை டி20 கிரிக்கெட்டில் முடிந்துவிட்டது என்று நினைக்கிறேன். தொடக்க வீரராக வாய்ப்பை இழந்த அவர் மிடில் ஆர்டரிலாவது விளையாடலாம் என்று பார்த்தால் இந்திய அணியின் தற்போதைய மிடில் ஆர்டரிலும் மிக பலமான வீரர்கள் இருப்பதால் கே.எல்.ராகுல் மீண்டும் டி20 அணிக்கு திரும்புவது சாத்தியமற்றது. இவ்வாறு அவர் கூறினார்.

### தீபாவளி முன்பதிவு:

# தென் மாவட்ட முக்கிய ரயில்களில் மூன்றரை நிமிடங்களில் விற்ற டிக்கெட்

**சென்னை, ஆக. 19-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னையில் இருந்து அக்.17-ம் தேதி சொந்த ஊர்களுக்கு புறப்படுவதற்கு வசதியாக, ரயில் டிக்கெட் முன்பதிவு நேற்று காலை தொடங்கிய நிலையில், பாண்டியன், பொதிகை, நெல்லை உள்பட தென் மாவட்டத்துக்கான முக்கிய ரயில்களில் மூன்றரை நிமிடங்களில் டிக்கெட் முன்பதிவு முடிந்து, காத்திருப்போர் பட்டியல் வந்தது. இதனால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

நிகழாண்டில் தீபாவளி பண்டிகை வரும் அக்.20-ம் தேதி (திங்கள்கிழமை ) கொண்டாடப்படுகிறது. ரயில் டிக்கெட் முன்பதிவை பொருத்தவரை 60 நாட்களுக்கு முன்பாக, முன்பதிவு செய்யும் வசதி உள்ளது. அந்தவகையில், பண்டிகைக்கு 4 நாட்கள் முன்பாக டிக்கெட் முன்பதிவு நேற்று முன்தினம் தொடங்கி நடைபெற்றது.

இந்நிலையில், அக்.17-ம் தேதி அன்று சென்னையில் இருந்து விரைவு ரயில்களில் புறப்படுவதற்கு வசதியாக, டிக்கெட் முன்பதிவு திங்கள்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கியது. ஐ.ஆர்.சி.டி.சி இணையதளம் வழியாகவும், ரயில் டிக்கெட் முன்பதிவு மையங்கள் மூலமாகவும் டிக்கெட் முன்பதிவு நடைபெற்றது.

சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் முக்கிய விரைவு ரயில்களில் 2-ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளில் டிக்கெட் முன்பதிவு அடுத்தடுத்து முடிந்து, காத்திருப்போர் பட்டியல் காட்டியது. குறிப்பாக, முக்கிய ரயில்களில் மூன்றரை நிமிடங்களில் டிக்கெட் முன்பதிவு முடிந்து காத்திருப்போர் பட்டியல் வந்தது. காலை 8.15 மணிக்குள் பெரும்பாலான ரயில்களில் டிக்கெட் முடிந்து காத்திருப்போர் பட்டியலுக்கு வந்தது. சென்னையில் இருந்து மதுரை, தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில் ஆகிய ஊர்களுக்கு முறையே புறப்படும் பாண்டியன், பொதிகை , நெல்லை, முத்துநகர், கன்னியாகுமரி ஆகிய விரைவு ரயில்களின் இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளில், டிக்கெட் முன்பதிவு சில நிமிடங்களில் முடிந்து, காத்திருப்போர் பட்டியல் வந்தது. மேலும், காத்திருப்போர் பட்டியலும் முடிந்து, “ரெக்ரெட்” என்று வந்தது.இதுபோல, சென்னையில் இருந்து தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களுக்கு புறப்படும் சேரன், நீலகிரி ஆகிய விரைவு ரயில்களிலும் இதை நிலை தான். இந்த ரயில்களில் 2-ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளுக்கு டிக்கெட் முன்பதிவு முடிந்து, காத்திருப்போர் பட்டியல் காட்டியது. சில மணி நேரத்தில் “ரெக்ரெட்” நிலைக்கு வந்துவிட்டது. முக்கிய ரயில்களில் ஏசி வகுப்பு டிக்கெட் பதிவு நடைபெற்று முடிந்தன.தீபாவளி பண்டிகைக்கு சனி, ஞாயிறு விடுமுறையுடன் ஊருக்கு செல்லும் நோக்கில், ரயில்வே டிக்கெட் கவுன்ட்டர்களில், டிக்கெட் எடுக்க காத்திருந்த மக்கள் சில நிமிடங்களில் டிக்கெட் முடிந்ததால், ஏமாற்றம் அடைந்தனர்.

### துணை ஜனாதிபதி தேர்தல்:

# 20-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்கிறார் சி.பி.ராதாகிருஷ்ணன்

**புதுடெல்லி, ஆக. 19-**

துணை ஜனாதிபதி தேர்தலுக்காக வருகிற 20-ம் தேதி சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

இந்திய துணை ஜனாதிபதியாக இருந்தவர், ஜெகதீப் தன்கர். நாட்டின் 16-வது துணை ஜனாதிபதியாக கடந்த 2022-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், கடந்த மாதம் 21-ந் தேதி திடீரென தனது பதவியை ராஜினாமா செய்தார்.

தன்கர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான ஆயத்தப்பணிகளை தேர்தல் கமிஷன் தொடங்கியது. அதன்படி, புதிய துணை ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் 9-ந் தேதி நடைபெறும் என தேர்தல் கமிஷன் அறிவித்தது. நாடாளுமன்றத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும், அதைத்தொடர்ந்து உடனே வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, துணை ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் மாதம் 9-ந்தேதி நடைபெற உள்ள நிலையில், பாஜக கூட்டணி வேட்பாளராக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டு உள்ளார். பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்சிமன்றக்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. துணை ஜனாதிபதி வேட்பாளராக தேர்வாகி இருக்கும் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு பிரதமர் மோடி, அமித்ஷா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்களும் வாழ்த்துகளை கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், துணை ஜனாதிபதி தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சி.பி. ராதாகிருஷ்ணன், வருகிற 20-ம் தேதி தனது வேட்புமனுவை தாக்கல் செய்ய உள்ளார். இந்நிகழ்வில் பிரதமர் மோடி, பாஜக தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய மந்திரிகள், தே.ஜ.கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

## தெ.ஆ.அணியில் இளம் வீரர்

தென் ஆப்பிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. முதலில் நடைபெற்ற டி20 தொடரை 2-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் இன்று தொடங்குகிறது.

முதல் போட்டி இந்திய நேரப்படி இன்று காலை 10 மணிக்கு தொடங்குகிறது. இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணியில் இளம் வேகப்பந்து வீச்சாளரான க்வேனா மபாகா சேர்க்கப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரில் சிறப்பாக செயல்பட்டதன் காரணமாக அவருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## ரூட்லிப் ஜோடி சாம்பியன்

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவின் இறுதிப்போட்டியில் நியூசிலாந்தின் எரின் ரூட்லிப் - கனடாவின் கேப்ரியலா டப்ரோவ்ஸ்கி ஜோடி, சீனாவின் குவோ ஹன்யு - ரஷியாவின் அலெக்ஸாண்ட்ரா பனோவா ஜோடியுடன் மோதியது.

இந்த மோதலில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய எரின் ரூட்லிப் ஜோடி 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் குவோ ஹன்யு - அலெக்ஸாண்ட்ரா பனோவா ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.

## ஆசிய கோப்பை ப்ரோமோ

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற உள்ளது. டி20 வடிவில் நடைபெறும் இந்தத் தொடரில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், யுஏஇ, ஓமன் உள்பட 8 அணிகள் பங்கேற்கின்றன. தலா 4 அணிகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் சுற்று நடக்கிறது. இதில் இரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்தச் சுற்றில் முதல் 2 இடம் பிடிக்கும் அணிகள் 28-ம் தேதி பைனலில் மோதும். ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இந்தியா வரும் 14-ம் தேதி பாகிஸ்தானுடன் துபாயில் மோதுகிறது. இந்நிலையில் இந்த தொடருக்கான ப்ரோமோவை சோனி வெளியிட்டுள்ளது.



**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், மாணவிகளுக்கு 2025-2026 ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார்.**



**திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவிலில் அ.தி.மு.க. பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி சுவாமி தரிசனம் செய்தார். அவருடன் விவசாயப் பிரிவுச் செயலாளரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முக்கூர் என். சுப்பிரமணியன், திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ராமச்சந்திரன் செய்தித் தொடர்பாளரும், வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளருமான பாபு முருகவேல் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளும் சுவாமி தரிசனம் செய்தனர்.**

### துணை ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு:

# இன்டியா கூட்டணி ஆலோசனை

**புதுடெல்லி, ஆக. 19-**

துணை ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று இன்டியா கூட்டணி ஆலோசனை கூட்டம் தொடங்கியுள்ளது.

இந்திய துணை ஜனாதிபதியாக இருந்தவர், ஜெகதீப் தன்கர். நாட்டின் 16-வது துணை ஜனாதிபதியாக கடந்த 2022-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், கடந்த மாதம் 21-ந் தேதி திடீரென தனது பதவியை ராஜினாமா செய்தார்.

தனது உடல் நிலையை கருத்தில் கொண்டு பதவி விலகுவதாக ஜனாதிபதிக்கு அவர் கடிதம் அனுப்பினார். அவரது ராஜினாமாவை ஜனாதிபதி திரவுபதி முர்முவும் ஏற்றுக்கொண்டார். இன்னும் 2 ஆண்டுகள் பதவிக்காலம் இருந்த நிலையில் திடீரென ஜெகதீப் தன்கர் பதவி விலகியது மத்திய அரசு வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தன்கர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான ஆயத்தப்பணிகளை தேர்தல் கமிஷன் தொடங்கியது. அதன்படி, புதிய துணை ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் 9-ந் தேதி நடைபெறும் என தேர்தல் கமிஷன் அறிவித்தது. நாடாளுமன்றத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும், அதைத்தொடர்ந்து உடனே வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், துணை ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் மாதம் 9-ந்தேதி நடைபெற உள்ள நிலையில், பாஜக கூட்டணி வேட்பாளராக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டு உள்ளார். பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதற்கிடையில் துணை ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என இன்டியா கூட்டணியை சேர்ந்த சில கட்சிகள் கூறியிருந்தன. இந்த நிலையில், துணை ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்பது குறித்து இன்டியா கூட்டணி சார்பில் மாநிலங்களவை எதிர்க்கட்சித்தலைவர் மல்லிகார்ஜுன கார்கேயின் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் தற்போது தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டத்தில் சிபிஎம் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, திமுக எம்.பி. கனிமொழி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், சுப்ரியா சுலே, சமாஜ்வாதி ராம்கோபால் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். இதில் யாரை துணை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது? என்பது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. திமுக மாநிலங்களவை எம்.பி. திருச்சி சிவா பெயர் பரிசீலனையில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### டாஸ்மாக் வழக்கில்

# அமலாக்கத்துறை விசாரணைக்கு தடையை நீட்டித்தது சுப்ரீம் கோர்ட்

**டெல்லி, ஆக. 19-**

டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கான தடை நீட்டிப்பு செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.



டாஸ்மாக் நிறுவனத்தில் சுமார் 1000 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாக எழுந்த புகார்களின் அடிப்படையில் டாஸ்மாக் நிறுவனத்திற்கு எதிராக அமலாக்கத்துறை சட்டவிரோத பண பரிவர்த்தனையின் கீழ் வழக்கு பதிவு செய்தது.

இதனையடுத்து, டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறையினர் கடந்த மார்ச் 6 முதல் 8ம் தேதிவரை சோதனை நடத்தினர். மேலும் டாஸ்மாக் நிறுவனத்தில் உள்ள கணினி, மடிக்கணினி, பென் டிரைவ், சி.டி.க்கள் உள்ளிட்டவற்றை அமலாக்கத்துறையினர் பறிமுதல் செய்தனர். அமலாக்கத்துறையின் சோதனைக்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது. இதனையடுத்து, டாஸ்மாக் நிறுவனம் மீதான அமலாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கக்கோரி தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுவை கடந்த மே 22ம் தேதி விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, இந்த வழக்கில் அமலாக்கத்துறை அனைத்து விதிகளையும் மீறுகிறது, வரம்பு மீறி செயல்படுகிறது என்று கண்டனம் தெரிவித்தது. மேலும், அமலாக்கத்துறை அனைத்து எல்லையையும் தாண்டி செயல்பட்டு கூட்டாட்சி அமைப்பை சிதைத்துள்ளது என்று குற்றஞ்சாட்டியது. இதையடுத்து, டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு தடை விதித்து வழக்கை ஒத்தி வைத்தது.

இந்நிலையில், டாஸ்மாக் நிறுவனம் மீது அமலாக்கத்துறை விசாரணைக்கு எதிரான வழக்கு நேற்று சுப்ரீம் கோர்ட்டில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, டாஸ்மாக் நிறுவனம் மீது அமலாக்கத்துறை நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட தடை தொடரும் என்று சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்தது. மேலும், இந்த வழக்கில் அமலாக்கத்துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரியதால் 4 வாரங்களுக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படது.

இந்த வழக்கில் இன்றைய விசாரணையின்போது, அமலாக்கத்துறைக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டு கூறும் கருத்துக்கள் ஊடகத்தில் மட்டுமல்லாமல், கீழமை நீதிமன்றங்கள் வரை பரவுவதாக அமலாக்கத்துறை தரப்பில் முறையீடு செய்யப்பட்டது. இதற்கு பதிலளித்த சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் “நாங்கள் தனி நபரையோ அல்லது அமைப்பையோ தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதில்லை. மாறாக வழக்கின் தன்மையை பொறுத்தே நாங்கள் கருத்துக்களை கூறுகிறோம்” என தெரிவித்தார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# சினிமா CINI செய்திகள்

## கூலி திரைவிமர்சனம்



சன் பிச்சர்ஸ் கலாநிதி மாறன் தயாரிப்பில் ரஜினி காந்த் நடிப்பில் கடந்த 14-ஆம் தேதியன்று வெளியாகி ஓடிக்கொண்டு இருக்கும் படம் கூலி. கதை – ரஜினியின் நண்பர் சத்யராஜ் திடீரென்று இறந்து விடுகிறார். அவரது இறப்பு இயற்கையானது அல்ல. கொலை என்பது தெரியவர கொலையாளி யார்? என்பதை கண்டுபிடிக்க களத்தில் இறங்குகிறார் ரஜினிகாந்த், கடத்தல் கூட்டத்திற்குள் நுழைகிறார். அப்போது அவர்கள் பற்றிய பல திடுக்கிடும் உண்மைகள் தெரிய வருகிறது. அவர்களால் தனது நண்பரின் மகளுக்கு ஆபத்து இருப்பதை கண்டுபிடிக்கிறார். அவர்களிடம் இருந்து நண்பரின் மகளை எப்படி காப்பாற்றுகிறார் என்பதே கூலி படம். ரஜினிகாந்த் வழக்கம் போல ஸ்டைல் மற்றும் நடிப்பில் கவர்கிறார். இளமைக்கால ரஜினிகாந்தின் ஏ.ஐ ஒர்க் அருமையாக உள்ளது. வில்லன்களின் என்ட்ரியை வைத்து காட்சிகளை வேகமாக நகர்த்த முயற்சித்திருக்கும் இயக்குநர் லோகேஷ் கனராஜ், திடீரென்று ரஜினிகாந்தின் மனைவி, தொலைந்த மகள் என்று படத்தை ஆமை வேகத்தில் நகர்த்துகிறார். நாகர்ஜுனா. சவுபின் சாஹிர். சத்யராஜ், ஸ்ருதி ஹாசன், ரெபா மோனிகா ஜான், மோனிஷா பிளஷி உள்ளிட்ட அனைவரும் சிறப்பான நடிப்பைக் கொடுத்துள்ளனர். சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கும் அமீர் கான் பட்டையை கிளப்பி இருக்கிறார். அனிருத்தின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் சுமார் ரகம். ஒளிப்பதிவாளர் கிரிஷ் கங்காதரன், காட்சிகள் அனைத்தையும் பிரமாண்டமாக கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், விக்ரம் என்ற மாபெரும் வெற்றியை கொடுத்த இயக்குநர் லோகேஷ் கனகராஜுக்கு சறுக்கலாக அமைந்துள்ளது இந்த கூலி.

## ஒரே நேரத்தில் இரண்டு படங்களை தயாரிக்கும் ஆர். ஜே. சாய்




கனடா நாட்டின் டொராண்டோவில் உள்ள ஆர் ஜே சாய், தனது பிறந்த நாளை முன்னிட்டு இரண்டு படங்களை தயாரிக்கவுள்ளதாக அறிவித்துளார். ஆர் ஜே சாய் இண்டர்நேஷனல் பேனரில் உருவாகவுள்ள இப்படங்களுக்கு 'பிரெய்ன்' மற்றும் 'ஷாம் தூம்' எனப் பெயரிடபப்ட்டுள்ளன. 'பிரெய்ன்' திரைப்படத்தை 'தாதா 87', 'பவுடர் ', மற்றும் 'ஹரா' புகழ் விஜய்ஸ்ரீ ஜி இயக்க, 'ஷாம் தூம்' படத்தை நவீன் குமார் இயக்குகிறார். 'ஷாம் தூம்' படத்தின் கதை, திரைக்கதையை ஆர் ஜே சாய் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறித்து பேசிய ஆர் ஜே சாய் பேசுகையில், 'பிரெய்ன்' மற்றும் 'ஷாம் தூம்' படங்கள் வாயிலாக எனது பயணத்தை தொடங்குகிறேன். உலகத் தரத்தில் இப்படங்கள் உருவாகவுள்ளன. கதையம்சம் மிக்க படங்களையும், திறமை கொண்ட இளைஞர்களையும் ஆர் ஜே சாய் இண்டர்நேஷனல் தொடர்ந்து ஊக்குவிக்கும். இப்படங்களில் பணியாற்றும் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என்றார்.



இந்திய திருநாட்டின் 79-வது சுதந்திர தினத்தையொட்டி மதுரை மாவட்டம், மேலூர் ஒன்றிய அலுவலகத்தில் கடந்த 20 வருடமாக ஜீப் ஓட்டுனராக பணிபுரிந்து வந்த பா. மீனாட்சி சுந்தரத்திற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தங்க மெடல் அணிவித்து சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.



திண்டுக்கல் ஒய்.எம்.ஆர்.பட்டியில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு நடைபெற்ற அன்னதானத்தை அ.தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜசேகர் தொடங்கி வைத்தார். இதில் பகுதி செயலாளர் மோகன், பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், மாமன்ற உறுப்பினர் சத்தியவாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் நிர்வாகிகள் அருண், சின்னு மற்றும் பலர் உள்ளனர்.

## கடுக்கா இசை வெளியீட்டு விழா




விஜய் கௌரிஷ் புரொடக்ஷன்ஸ் - நியந்த் மீடியா அண்ட் டெக்னாலஜி, மலர் மாரி மூவிஸ் - கௌரி சங்கர் ரவிச்சந்திரன் - ஆனந்த் பொன்னுசாமி ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள படம் கடுக்கா. இப்படத்தை எஸ்.எஸ்.முருகராசு இயக்கியிருக்கிறார். சமூக அக்கறையுடன், கிராமிய பின்னணியில் கமர்ஷியல் படைப்பாக உருவாகியுள்ள இந்த படம் விரைவில் வெளியாக உள்ள நிலையில், படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் சி.வி.குமார் பேசுகையில், "இந்த ப்படத்தின் டிரெய்லரைப் பார்க்கும் போது என்னுடைய அட்டகத்தி படம் பார்ப்பது போலவே இருந்தது. சின்ன சின்ன படங்கள் எடுப்பதைத் தாண்டி படத்தை விளம்பரப் படுத்துவதில் தான் இருக்கிறது அதன் சூட்சமம். அதை மிகச் சிறப்பாக தனஞ்செயன் சார் செய்து வருகிறார். அவர் இந்தப்படத்தை ரிலீஸ் செய்வது மகிழ்ச்சி. படம் வெற்றி பெற படக்குழுவினர் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள் நன்றி. என்றார்.

## நிவின் பாலி நயன்தாரா இணைந்து நடிக்கும் டியர் ஸ்டூடண்ட்ஸ்



நிவின் பாலி – நயன்தாரா ஜோடி மீண்டும் இணையும் இந்தப் படத்தை, அறிமுக இயக்குநர்கள் ஜார்ஜ் பிலிப் ராய் மற்றும் சந்தீப் குமார் எழுதி இயக்கியுள்ளனர். மேவரிக் மூவிஸ் தயாரிப்பில், நிவின் பாலியின் *Pauly Jr. Pictures* மற்றும் ரவுடி பிச்சர் இணைந்து இப்படத்தை தயாரிக்கின்றன. நிவின் பாலி ஹரி என்ற கதாபாத்திரத்தில் களமிறங்க, நயன்தாரா ஒரு வலிமையான போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார். கடந்த 2019 ஆம் ஆண்டு வெளியான லவ் ஆக்சன் டிராமா என்று திரைப்படத்திற்குப் பின், நிவின் பாலி – நயன்தாரா ஜோடி மீண்டும் இப்படத்தில் இணைந்துள்ளனர். படத்தில் கிங்ஸ்லி, ஆடுகளம் முருகதாஸ், சரத் ரவி, உதய் மகேஷ், தீப்தி, கீரண் கொண்டா, காமருதீன் K உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

## ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்த அக்யூஸ்ட் படக்குழு



ஜேசன் ஸ்டுடியோஸ், சச்சின் சினிமாஸ், ஸ்ரீதயாகரன் சினி புரொடக்ஷன், மை ஸ்டுடியோஸ் நிறுவனங்கள் சார்பில் தயாரிப்பாளர்கள் உதயா, தயா என். பன்னீர் செல்வம், எம். தங்கவேல் ஆகியோரின் தயாரிப்பில், பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்கத்தில் ஆகஸ்ட் 1 அன்று வெளியான 'அக்யூஸ்ட்' திரைப்படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 'அக்யூஸ்ட்' படக்குழுவினர் விழா ஒன்றினை சென்னையில் ஒருங்கிணைத்தனர். இந்த விழாவில் படக்குழுவினருடன் தயாரிப்பாளர்கள் ஏ. எல். அழகப்பன், அழகன் தமிழ்மணி, சௌந்தர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், நடிகர் ஏ. எல். உதயா பேசுகையில், இந்தப் படம் வெளியாகி மூன்றாவது வாரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருப்பதே வெற்றி தான். அதனால்தான் இதற்கு காரணமான ஊடகத்தினருக்கும்,

ரசிகர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்பினோம். இந்தப் படத்தின் கதை நல்ல கதை. நண்பர்கள், தயாரிப்பாளர்கள், திரை உலகத்தின் ஆதரவுடன் படத்தினை தயாரித்து விட்டோம்.

இந்தப் படத்தை திரையரங்குகளில் தொடர்ந்து ஓட வைப்பதற்காக போராடிக் கொண்டே இருக்கிறோம் என்றார்.

## ஆக.29-ல் வெளியாகும் சமுத்திரக்கனியின் வீரவணக்கம்



பிரபல மலையாளத் திரைப்பட இயக்குனர் அனில் வி. நாகேந்திரன் முதன் முறையாக தமிழில் இயக்கி சமுத்திரக்கனி மற்றும் பரத் இணைந்து நடித்திருக்கும் படம் வீரவணக்கம். சம காலத்தில் நடைபெறும் சமூக அவலங்களும், கடந்த காலத்தில் நடந்த புரட்சிகளும் இந்த கதையில் முக்கிய கருத்தை உணர்த்தும் விதமாக படம் உருவாக்கப்பட்டுள்ளதாக இயக்கனர் தெரிவித்திருக்கிறார். இந்தப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் தேசிய விருது பெற்ற நடிகை சுரபி லக்ஷ்மி நடித்திருக்கிறார். இப்படம் இம்மாதம் 29 அன்று உலகம் முழுவதும் வெளியாக உள்ளது.

## எடப்பாடியாரின் எழுச்சி பயணம் இன்றைக்கு வெற்றிப் பயணமாக உள்ளது

### மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் பேட்டி

**மதுரை, ஆக 19-**

எடப்பாடியாரின் எழுச்சி பயணம் இன்றைக்கு வெற்றிப் பயணமாக உள்ளது என்று மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் தெரிவித்தார்.



இது குறித்து அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் நிருபர்களிடம் கூறியதாவது-

எடப்பாடியார் எழுச்சி பயணத்தை கண்டு முதலமைச்சர் ஸ்டாலின் தூக்கம் இல்லாமல் தவித்து வருகிறார்.வாய்க்கு வந்ததைப் பேசி மக்களை திசைதிருப்ப நினைக்கிறார்.அது தோல்வில் தான் முடிகிறது. கடந்த சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் இந்தியாவிலே தமிழகம் வளர்ச்சி அடைந்திருப்பதாக கூறியுள்ளார். ஆனால் கடந்த எடப்பாடியார் ஆட்சியில் செய்திட்ட திட்டங்களை எல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி அதை தான் செய்த சாதனையாக தான் மக்களிடத்தில் விளம்பரப்படுத்துகிறார்.குறிப்பாக எடப்பாடியார் ஆட்சியில் உயர் கல்வியில் 52% முன்னேற்றம் அடைந்தது அதைக் கூட தான் செய்ததாக ஸ்டிக்கர் ஒட்டுகிறார். எடப்பாடியார் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரி கொண்டு வந்தார் இந்த நான்கு ஆண்டுகளில் ஒரு மருத்துவ கல்லூரி கூட ஸ்டாலினால் கொண்டுவர முடிந்ததா? தற்போது ஸ்டாலின் ஆட்சியில் உள்கட்டமைப்பில் கடந்த நான்கு ஆணடுகளாக முன்னேற்றம் இல்லை.உதாரணமாக சென்னையில் 5000 கோடிக்கு மழை வடிகால் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து அது அரை குறை நிலையில் தான் உள்ளது. இன்றைக்கு மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் தான் கட்டுமான பொருட்கள் 20% உயர்வு, சமையல் பொருட்கள் 30 சதவீதம் உயர்வு உள்ளது. அதே போல கடந்த 75 ஆண்டுகளில் தமிழக வாங்கிய கடன் தொகை 5 லட்சம் கோடி, ஆனால் இன்றைக்கு இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் இந்த அரசு வாங்கிய கடன் நாலரை லட்சம் கோடி ஆகும்.

அதே பல இன்றைக்கு போதை பொருளால் 12 சகவீத மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். ஆயிரம் கோடியில் கழிப்பறை சுத்தம் செய்வதில் ஊழல், மதுரை மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சி ஊழல் இதுபோன்ற நிகழ்வால் இந்தியாவிலேயே தமிழகம் கரைபடிந்து உள்ளது. இன்றைக்கு மக்களை வாட்டி வதைக்கும் இந்த ஸ்டாலின் தி.மு.க. அரசிடம் இருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்றால் மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அம்மா ஆட்சி மலர வேண்டும்.அதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள் அதனால் தான் எடப்பாடியாரின் எழுச்சி பயணம் இன்றைக்கு வெற்றிப் பயணமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## திருமங்கலத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க ஐ.டி விங் சார்பில் வார்ரூம்

### மாவட்டச் செயலாளர் மணிமாறன் திறத்து வைத்தார்



**திருமங்கலம்.ஆக.19.**

திருமங்கலம் நகரில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க ஐ.டி விங் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவகம் வார்ரூமினை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திறத்து வைத்தார்.

2026 தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு முன்கூட்டியே தயாராகிடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின்,தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது அறிவுறுத்தலின் படி தமிழக தொழில் துறை அமைச்சர், திமுக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா வழிகாட்டுதலின் பேரில் தமிழகம் முழுவதிலும் தி.மு.க ஐ.டி விங் சார்பில் அண்ணா அறிவகம் வார்ரூம்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வார்ரூம்கள் மூலம் தி.மு.க அரசின் பல்வேறு சாதனைகளை பொது மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையிலும், எதிர்கட்சிகளின் அவதூறு பிரச்சாரங்களுக்கு உடனடியாக பதில் கொடுத்திடும் வகையிலும் அதிநவீன யுக்திகளை யுடியூப், வாட்சப், டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் செயலிகள் மூலம் தி.மு.க ஐ.டி விங் மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் நகர் மதுரை சாலையிலுள்ள பாப்பா அப்பார்ட்மென்ட்டில் மதுரை தெற்கு மாவட்ட ஐ.டி விங் சார்பில் கணினிகள் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவகம் வார்ரூமின் திறப்பு விழா நேற்று மாலை நடைபெற்றது.கழக ஐ.டி விங் துணைச் செயலாளர்கள் சுரேஷ் செல்வராஜ், பாசபிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஐ.டி விங் அமைப்பாளர் ஜெயச்சந்திரன் வரவேற்றார். ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று மதுரை தெற்கு மாவட்ட திமுக ஐ.டி.விங் வார்ரூம் "பஃயர் வால்" அண்ணா அறிவகத்தை திறந்து வைத்து அதன் செயல் பாடுகளை பார்வையிட்டார். இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட திமுக ஐ.டி விங் துணை அமைப்பாளர்கள் தவமணி முருகன், தினேஷ், பாலா, திருமங்கலம் நகர் செயலாளர் ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் மதன் குமார், ஆலம்பட்டி சண்முகம், தனசேகரன், ஜெயச்சந்தின், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் சிவனேசன், ராஜசேகர், பேரையூர் பேரூர் செயலாளர் வருசை முகமது,நகர் பொருளாளர், கவுன்சிலர் சின்னச்சாமி, துணை செயலாளர் செல்வம் கட்சி நிர்வாகிகள் கருவேலம் பட்டி வெற்றி, காண்டை முருகன், ரவி, பாலா,முத்துப் பாண்டி, ராஜா சீத்தாராம், கிரிஸ், அலெக்ஸ், கருப்பசாமி, முத்து, சாமிநாதன் மற்றும் தெற்கு மாவட்ட ஐ.டி விங் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் இருந்து சென்னைக்கு அரசு விரைவு பேருந்து இயக்க கோரிக்கை

நத்தம்,ஆக,19

**திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ்நிலையத்தில் இருந்து கொட்டாம்பட்டி, துவரங்குறிச்சி, விராலிமலை வழியாக தினமும் இரவு 8 மணிக்கு சென்னைக்கு அரசு விரைவு பேருந்து இயக்கபட்டு வந்தது. அதே நேரத்தில் சென்னையில் இருந்து நத்தத்திற்கும் அரசு விரைவு பேருந்து இயக்கப்பட்டது.இந்த பேருந்தால் வியாபாரிகள், பொதுமக்கள் அலைச்சல் இல்லாமல் நத்தத்தில் இருந்து சென்னைக்கு சென்று கொண்டிருந்தனர். இந்நிலையில் கொரோனா காலத்தில் இந்த பேருந்து திடீரென எந்த வித முன்னறிவிப்பின்றி நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் பல முறை சம்பந்தபட்ட போக்குவரத்து துறை அதிகாரிகளிடம் மனுக்கள் கொடுத்தும் தற்போது வரை பேருந்து இயக்கபடவில்லை. இதனால் வியாபாரிகள், பொதுமக்கள் திண்டுக்கல், கொட்டாம்பட்டி பகுதிகளுக்கு சென்று சென்னைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே சம்பந்தபட்ட போக்குவரத்து நிர்வாகம் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நலன்கருதி நிறுத்தப்பட்ட அரசு விரைவு பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையும் எழுந்துள்ளது.**



● சென்னை ராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகன சுரங்க பாதையினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழு தலைவர் தா.இளையஅருணா உடனிருந்தனர்.

### ராயபுரத்தில் ரூ.30.13 கோடியில் கட்டப்பட்டுள்ள

# சுரங்கப்பாதையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஆக. 19-

ராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகனச் சுரங்கப்பாதையினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகனச் சுரங்கப்பாதையினை திறந்து வைத்து பார்வையிட்டார். வடசென்னை கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள போஜராஜன் நகர் மூன்று புறமும் ரெயில்வே இருப்புப் பாதையினால் சூழப்பட்டுள்ளதால், இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ரெயில்வே சந்திப்பு கடவின் மூலமே வெளியே செல்ல முடியும். மேலும் அவசர காலங்களில் அவர்களால் வெளியே செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. எனவே இங்கு வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்ட வட சென்னை பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, போஜராஜன் நகரில் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணி கடந்த 2023-ம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது.

இச்சுரங்கப்பாதையின் நீளம் 207 மீட்டர் (ரெயில்வே பகுதி 37 மீட்டர் உட்பட), அகலம் 6 மீட்டர் ஆகும். மேலும், மழைக் காலங்களில் மழை நீரை வெளியேற்ற ஒரு நீர் சேகரிக்கும் கிணறு, 85 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மற்றும் ஒரு ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளன. இப்பணியின் மூலம் போஜராஜன் நகர், சீனிவாசன் நகர் மற்றும் மின்ட் மார்டன் சிட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

மேலும், போஜராஜன் நகர் வாகனச் சுரங்கப்பாதையினையொட்டி 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் விளையாட்டுத்திடல், ரவுண்டானா பூங்கா மேம்பாட்டுப் பணிகள், ரவுண்டானாவைச் சுற்றிலும் நடைபாதை மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கான ஓய்வுக்கூடம் ஆகியவற்றையும் துணை முதல்வர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குடியரசு துணைத்தலைவர் தேர்தல்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஆதரவு கோரிய மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங்

சென்னை, ஆக. 19-

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஆதரவு கோரினார் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவு கோரி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பா.ஜ.க. ஆட்சிமன்ற குழு கூட்டத்தில் விரிவான ஆலோசனைக்கு பிறகு தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக மகாராஷ்டிர ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனின் பெயரை பா.ஜ.க. தேசியத்தலைவரும், மத்திய அமைச்சருமான ஜெ.பி. நட்டா அறிவித்தார்.

அனைத்து கட்சிகளின் ஆதரவோடு ஒருமனதாக குடியரசு துணைத்தலைவர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் இதுதொடர்பாக எதிர்க் கட்சிகளிடமும் ஆலோசித்திருப்பதாக நட்டா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் திங்கள்கிழமை காலை ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது, தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு திமுகவிடம் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

இதனிடையே, குடியரசு துணைத் தலைவர் தேர்தல் தொடர்பாக இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் தில்லியில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.



● சென்னை வண்டலூர் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக அரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சமீபத்தில் பதவி உயர்வு பெற்ற 190 துணை மாநில வரி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.மூர்த்தி ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இதில் வணிகவரிநததுறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன் உடனிருந்தனர்.



● மதுரை ரோஸ்கோர்ஸ் சாலையில் உள்ள அரசு அச்சகத்தில் நேற்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்து பார்வையிட்டார். அருகில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, மு.பூமிநாதன் ஆகியோர் உள்ளனர்.



● திருவண்ணாமலை கிழக்கு மாவட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியை செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்று வரும் ரஞ்சிதா நேற்று நேரில் சந்தித்து 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டினை ஏற்படுத்தி கொடுத்தமைக்காக தனது நன்றியினை தெரிவித்து வாழ்த்து பெற்றார்.

### குடியரசு துணைத்தலைவர் தேர்தல்:

# தி.மு.க.வுக்கு இ.பி.எஸ் வேண்டுகோள்

சென்னை, ஆக. 19-

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக சி.பி. ராதாகிருஷ்ணன் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், தி.மு.க. எம்.பிக்கள் கட்சி பேதமின்றி அவருக்கு ஆதரவு தர வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இதுவரை திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவர் நேற்று திருவண்ணாமலை மாவட்டத்திற்கு சென்றார். அதனை தொடர்ந்து நேற்று அவர் அண்ணாமலையார் கோயிலில் சாமி தரிசனம் செய்தார்.

இதையடுத்து அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் சி.பி.ராதாகிருஷ்ணன் தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "இது ஒரு நற்செய்தி. தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவர் குடியரசு துணைத் தலைவரானால் அது தமிழ்நாடுக்கு பெருமை. சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு எனது வாழ்த்துகள். கட்சி பேதமின்றி தி.மு.க. எம்.பிக்கள் தமிழகத்தை சேர்ந்த ஒருவர் குடியரசு துணைத் தலைவராவதற்கு தங்களது ஆதரவை தெரிவிக்க வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

# வங்கக்கடலில் மேலும் வலுப்பெற்ற புயல் சின்னம்

சென்னை, ஆக. 19-

வங்கக்கடலில் நிலவிய புயல் சின்னம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடலில் வடக்கு ஆந்திரா இடையே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று முன்தினம் உருவானது.

இது நேற்று காலை நிலவரப்படி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று உள்ளது.

மேற்கு மத்திய மற்றும் அதையொட்டிய வடமேற்கு வங்காள விரிகுடா மற்றும் வடக்கு ஆந்திரா-தெற்கு ஒடிசா கடற்கரைகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக அமைந்துள்ளது.

அடுத்த 12 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு நோக்கி நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும்.

இந்த புயல் சின்னம் இன்று (19-ந்தேதி) அதிகாலை தெற்கு ஒடிசா-வடக்கு ஆந்திரா கடற்கரையை கடக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# புனரமைப்பு முடிந்து அக்டோபரில் காந்தி நினைவு அருங்காட்சியகம் திறக்கப்படும்

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்

மதுரை, ஆக. 19-

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு பணிகள் நிறைவடையும் நிலையில், அக்டோபரில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும் என அமைச்சர் சாமிநாதன் கூறினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை அமைச்சர் சாமிநாதன் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகம், அதன் வளாகத்தில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு அரசு சார்பில், ரூ.50 லட்சத்தில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளையும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

இதன்பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் புனரமைப்பு பணிகள் நடக்கின்றன. இப்பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்தேன். அக்டோபர் மாதம் இறுதியில் பணிகள் அனைத்தும் நிறைவுற்று மீண்டும் பொது மக்கள் பயன்பாட்டுக்காக காந்தி நினைவு அருங்காட்சியகம் திறக்கப்படும்,' என்றார்.

ஆய்வின்போது, மதுரை ஆட்சியர் பிரவீன் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக, மதுரை மாவட்டத்தில் ரேஸ் கோர்ஸ் சாலையிலுள்ள அரசு அச்சகத்திலும், காந்தி மியூசியம் அருகிலுள்ள தமிழ் காட்சிக் கூடத்தையும் பார்த்து ஆய்வு செய்தார். மதுரை உலகத் தமிழ் சங்கக்காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டார். தொடர்ந்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வின்போது மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் ராஜாராமன், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் .பூமிநாதன், உலகத் தமிழ்ச் சங்கம் தனி அலுவலர் முனைவர். அவ்வை அருள், உலகத் தமிழ் சங்க துணைத் தலைவர் - இயக்குநர் முனைவர் பர்வீன் சுல்தானா மற்றும் எம்எல்ஏக்கள் கோ. தளபதி , பூமிநாதன், அதிகாரிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 16 ஆயிரம் கனஅடியாக உயர்வு

தருமபுரி, ஆக. 19-

கர்நாடகா மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.), கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளில் இருந்து தமிழக காவிரி ஆற்றில் நேற்று முன்தினம் 50 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்ட நிலையில் தற்போது 80 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று காலை 8 மணி நிலவரப்படி 6,500 கனஅடி யாக வந்த நீர்வரத்து மதியம் 12 மணி அளவில் 16 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து உள்ளது.

இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்து மகிழ்ந்தனர். மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டனர். மேலும் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.



● மதுரை பரவை சத்தியமூர்த்தி நகரில் 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தொட்டி அமைப்பதற்கான பூமிபூஜையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் ஜெயந்தி ராஜூ, பரவை சேர்மன் கலாமீனா ராஜா, வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பரவை ராஜா, விஜயகுமார், கு.திரவியம், மார்க்கெட் மார்நாடு, பரவை பேரூராட்சி கவுன்சிலர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.